February 1912. Registered No. M. 925.

# செந்தமிழ்ச்செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி I.] விரோதிகிருது ஞு மாசி-மீ 1-உ [பகுதி-II

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| செந்தமிழ்ச்செல்வச் சந்தாதாரர்களுக்குச் செலுத்தும் வந்தனம் | 237 |
| செந்தமிழ்ச்செல்வம் | 239, |
| சன்மார்க்கிர்த்தியங்கள், | 242 |
| மக்கட்பேறு | 245 |
| என் ஆலயத்துக்குப் போகிறீர்கள் | 248 |
| விரோதக்கூற்று. | 250 |
| பொறுமை | 251 |
| அறிவு | 253 |
| அகத்தியர் | 257 |
| தேசாபிமானமும் பாஷாபிமானமும் | 258 |
| மாணிக்கஜோதி | 262 |
| புத்தகவரவு | 264 |
| பலதேசவர்த்தமானம் | 265 |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4.

Copy Right Registered.

வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

லெக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

மாதிரி பத்திரிகை. 0—3—0.

# இதுவும் சிறப்பா! இதுவும் அருளா! இப்படியும் சான்றோர் செய்வரா!

அநேகர் பத்திரிகையை அனுப்பச் சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தோம். அவர்கள் தக்காரென்றே நினைத்தோம் அவர்கள் பத்திரிகையை வாங்கிக்கொண்டேயிருந்து வி. பி. தபாலில் அனுப்பியபொழுது மறுத்துவிட்டு எமக்குப் பெரு நஷ்டத்தை யுண்டாக்கிவிட்டனர். இவர்கள் பெருந்தன்மையும் பரோபகாரக்குணமும் வாய்மையும் எத்தன்மைத்தோ? காணம் என்றால் வாய்திறந்து கடிவாளம் என்றால் வாயைமூடும் குதிரையைத்தான் ஒப்பிடவேண்டிவரும்.

தக்காரென எண்ணிச்சிலருக்குப் பத்திரிகையை அனுப்பிக்கொண்டிருந்தோம் அம்மிக்கார்கள் பத்திரிகை வேண்டாதிருப்பின் முதலிலேயே மறுத்துவிட்டிருக்கலாம். பத்திரிகையிலும் பலமுறை எழுதியுமிருந்தோம் அது செய்யத் தங்களுக்கே தெரியாமற்போனாலும் பத்திரிகையில் எழுதியதுகண்டாகிலும் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் வி. பி. அனுப்பப்பட்டபின் திருப்பிவிட்டு எமக்கு நஷ்டப்படுத்திபிருக்கின்றனர். இவர்செயலை எப்படிப் புகழ்வதென்றறியேன்.

“பெருமையுஞ்சிறுமையுந் தான்றரவருமே” என்பதும் அறியாது அறியாதிருந்தனரே. இவர் மிக்காரே!

பன்னிரண்டாவது சஞ்சிகையை வி. பி. தபாலில் அனுப்பும்போது எத்தனைபேர் மறுத்துவிடக் காத்திருக்கின்றாரோ அறியேம்.

இதுவும் தமிழ்செய்த பாவமோ நாடு செய்த பாவமோ யாஞ்செய்த பாவமோ அறிதற்கரிதே! பத்திரிகை புதிதாகத் தொடங்குபவரும் தொடங்கியோரும் இதனைக்கண்டொழுகின் நலமே. முன்னே போவோன் கிணற்றில் விழின் பின்னே போவோனுக்கு விளக்குப் பிடித்ததுபோலவன்றோ?

பத்திராதிபர்.

## செந்தமிழ்ச் செல்வச் சந்தாதாரர்களே!

உங்கள் உதவியைக்கொண்டு ஒருவாறு உயர்வுறச் செந்தமிழ்ச்செல்வத்தை நடத்திவந்தோம்.

இதற்காக உங்களனைவர்க்கும் அன்புடன் வந்தனிக்கின்றோம்.

அடுத்த வருடத்திற்கும் முறையே செந்தமிழ்ச்செல்வம் இரண்டாவது புத்தகம் பன்னிரண்டு சஞ்சிகைகளையும் அனுப்பிவருவோமா தயைசெய்து அடுத்த வருஷம் சந்தாதாரராக இருக்க விருப்பமில்லாதிருப்பின் தயைசெய்து முதற் புத்தகம் பன்னிரண்டாவது சஞ்சிகை பெற்றவுடனே எமக்குத் தெரிவித்துவிட வேண்டுகின்றோம். இந்தப் பேருதவி செய்வீர்களென நம்புகின்றோம். நீங்கள் எல்லாம் தொடர்ந்து சந்தாதாரர்களாக இருந்து செந்தமிழை வளர்க்கவேண்டுமென்பதே எங்கள் வேண்டுகோள். இது உங்களுக்குப் பெரும்பாரமுமன்று.

பத்திராதிபர்.

# (Supplement to "SEN TAMIL SELVAM.")

சென்னை பிரசிடென்சி காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவர்

பிர்மஸ்ரீ மகா மகோ உபாத்தியாயர்

## வே. சாமிநாத ஐயர் அவர்கள்

## அபிப்பிராயம்.

சிலமாதங்களாக வெளி வந்து உலாவும் **"செந்தமிழ்ச் செல்வம்"** என்னும் பத்திரிகையைப் பார்த்து வருகிறேன்.

சிறந்த வித்வான்களது இருப்பிடமாக விளங்கிய திரிசிரபுரத்தில் இருந்த தமிழ் வித்வான் ஸ்ரீ அமிர்தம்பிள்ளை அவர்கள் குமாரரும், எஸ். பி. ஜி. காலேஜ் உதவித் தமிழ்ப் பண்டிதருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ **அ. சுந்தரநாத பிள்ளையவர்கள்** இப்பத்திரிகையை நடத்தி வருவதும் தக்கவர்கள இதற்கு வித்யாதானம் செய்வதும் தெரிந்து மிக்க திருப்தியடைகிறேன்.

இத்தகைய பத்திரிகை திரிசிரபுரத்தில் நடைபெற்று வருவது இன்றியமையாததே.

இத்தேசத்துக் கனவான்கள் இதனை ஆதரித்து இதன் பத்திராசிரியருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையன்.**

திரிசிரபுரம் மகா வித்துவானும் வித்வஜன சேகரருமாகிய ஸ்ரீமத் கோவிந்தக் கவிராயர் குமாரரும், பெங்களூர் சென்றல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவருமான வித்துவான்

## ஸ்ரீமத் தி. கோ. நாராயணசாமி பிள்ளை அவர்கள்

## அபிப்பிராயம்.

### அகவற்பா.

மணிநெடுங் கடல்சூழ *மாணில வரைப்பில்
அணிபெறுந் தமிழகத் தார்குறை தவிர்ப்பாள்
சோறுடைத் தாகிய சோழவள நாட்டாள்
சாறுடைத் தலம்பல தழுவிய பொன்னி
ஆர்சிர புரமதில் அமிர்தம் பயந்த
சீரமர் அமிர்தமாஞ் **"செந்தமிழ்ச் செல்வம்"**
தந்த வசனத் தனிச்சுவை யுண்ண
அடைமொழி கொண்டே அங்கங்குச் செல்லும்
$ தாள்பல கொண்டு சார்பவள் அகன்ற
† கூர்மை யிட்டகண் குசாக்கிர மதியள்
அமிர்திலெடுத்த ‡ஆனநவ நீதம்
மாதம் ஒரு §முறை யாகியே வருபவள்
காதலர் மகிழக் காண்பவள் இவளை
புனருற் பவமாப் பொருந்துறச் செய்தவள்

*மாணிலம் + மால் + நிலம். $ தாள் = ஏடு. † கூர்மையிட்டகண் = மிகுந்த அச்சு மையால் எழுதிய இடம். ‡ ஆன = ஆ + ன = பசுவின். § முறை = பக்கம்.

என்னரு மன்பன் இனியகுணச் செல்வன்
செந்தமிழ்க் கிலக்காய்த் திகழ்ந்தவன் பலநூல்
தந்தர யுக்தி தாச்செய் தாய்ந்தவன்
செந்தமிழ்த் தூதில் செய்ந்நன்றி மறவா
அன்பரை வைத்துத்தன்அகங்குளிர்ந் தார்ந்தவன்
"அமிர்தம் பிள்ளை" என்னுநன் னாவலன்
அருந்தவப் புத்திரன் செந்தமிழ்ப் பாவலன்
செந்நெல் விளைத்த செழுமுளை மீட்டுமச்
செந்நெலே யாவது போலத் திகழ்பவன்
பிறர்க்குப காரம் புரியும் பெற்றியன்
சைவ சமய சமரச மார்க்கன்
இலக்கிய இலக்கண மினிது பல கற்றோன்
தந்தை போலத் தருஞ்சிர புரத்தில்
எஸ். பி. ஜி. காலேஜ் இனியதமிழ்ப் பண்டிதன்
"சுந்தர நாதன்" என்னுந் தூயோன்
அந்தமிழ் வாணர் அறைபுக ழோனே.

## வெண்பா.

"செந்தமிழ்ச் செல்வம்" செழித்தோங்க நாளுளும்
வந்தவழி மாறாது வாழ்ந்திடுக—"சுந்தர
நாதன்" கருத்து நனியோங்க நாதனருள்
போதம் விளங்க பொருள்.

## சித்தாந்த சரபம்—அஷ்டாவதானம்,
## ஸ்ரீமத் பூவை—கலியாண சுந்தர முதலியாரவர்கள்
இயற்றியது.

தித்திக்குஞ் சித்தாந்த மணங்கமழுந் தமிழருமை செவ்வே யோங்கப்
புத்தியினில் யாருமுல கானுபவ மாராய்ந்து பொலிவு கொள்ள
உத்தமனல் லமிர்தசுந் தரநாத நாவலனு முயர்விற் பன்னன்
எத்திக்கு முலவச்செய் "செந்தமிழ்ச் செல்வம்" வாழ்க வென்று மாதோ.

---

சைவ சித்தாந்த மகா வித்துவானும் தருமபுரம் ஆதின வித்துவானும் மதுரைச் சங்கத்துக்கும் சைவ மகா சமாஜத்துக்கும் முக்கிய ஆலோசனைக் கர்த்தருமாகிய திருநெல்வேலி

## ஸ்ரீமத் S. பால்வண்ண முதலியாரவர்களின்
## அபிப்பிராயம்.

"செந்தமிழ்ச்செல்வம்" என்னும் இப்பத்திரிகை "தமிழ் மொழிக் கடலுட்டங்கிய பல்வளப் பொருள்களையும் யாவரும் ஒருங்கே எளிதிற் பெறுதற்கமைத்த ஓர் பண்டகசாலை போன்றதாம்"; இஃது "அமிர்தம் போன்ற வசனத்தையும் கல்வியழகே தனக்கோரழகெனக் கொண்ட தலைவனையும் பெற்றுள்ளதாதலால் யாவருக்குங் களிபேருவகையளிப்ப தொன்றேயாம்."

TINNEVELLY,
1—3—12.

S. PALVANNA MUDALIAR.

# செந்தமிழ்ச்செல்வம்

ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பகுதி-1.] விரோதிகிருது-௵ மாசி-௴ 1-உ [தொகுதி-II


## செந்தமிழ்ச்செல்வ சந்தாதாரர்களுக்குச் செலுத்தும் வந்தனம்.

ஆரியநாட்டுச்சீரி விரத்தினங்களே! கல்விச் செல்வம் பொருட் செல்வம் பெற்றுவிளங்கும் கனவான்களே! தமிழ்மொழி மாட்டுக்குறையா அன்புடைய தக்கோர்களே! குணஞ் செயலால் மிக்கோர்களே! சகோதரர்களே! பெரியோர்களே! செந்தமிழ்ச்செல்வத்தை ஆதரவுடன் ஏற்று அருமைகண்டு போற்றிமகிழும் புனிதகுணப் புண்ணியரே!

உங்களனைவருக்கும் வந்தனஞ் செலுத்துகின்றோம்.

எமது முயற்சியால் வெளிவரும் செந்தமிழ்ச்செல்வத்தைத் தமதாகப்பாவித்து அதன் வளர்ச்சியையும் பரவுதலையும் நீடூழிவாழுதலையும் விரும்பிய உங்கள்பரோபகாரக்குணமும்தேச நலங்கருதும் மேன்மையும் தாய்மொழிமாட்டுள்ளதணியா அன்பும் எம்மனோராற் புகழமுடியாச்சிறப்புடையதே.

செந்தமிழ்ச்செல்வம் நடைபெறல் செந்தமிழ்ச்செல்வத்தின் சந்தாதாரர்களாகிய உங்கள் அன்பாலேயாம்.

மக்கள் இவ்வுலகிலிருக்குந்துணையும் செல்வப்பொருளின் துணையின்றி எதனையுஞ் சாதித்துக்கொள்ளுதலருமை.

“ முனிவரு மன்னரு முன்னுவ பொன்னான் முடியும் ” என்றாற் பிறரைக் கேட்பானேன்.

சந்தாதாரர்களாகிய நீங்கள் செந்தமிழ்ச் செல்வத்தினிடத்து அன்புவைத்து அதனை வளர்க்குமாறு நீங்களனுப்பிய பொருளென்னும் செவிலித்தாய் ஒரு குறையுமின்றி வளர்த்து வருதற்குந் தடையுண்டோ? இதுகாறும் நம் செல்வம் நீங்களனைவரும் அன்பொடு அனுப்பிய செல்வம் என்னுஞ்செவிலியால் வளர்ந்து சற்றேறக்குறைய ஓராண்டு கடந்து ஈராட்டைப்பிராயத்தை யடைந்திருக்கின்றது.

இதற்காக உங்களுக்கு நான்மட்டுமல்ல தமிழுலக முழுதுமே நன்றிசெலுத்தக் கடன்மைப்பட்டிருக்கின்றோம். எமக்குப்பெருந்துணையாநின்று சந்தாதாரர்களாகிச் செல்வச்செவிலியையுமனுப்பி நமது செந்தமிழ்ச்செல்வத்தை வளர்த்த உங்களை "உங்கள் அன்பும் பெருமைக்குணமும் வாழி! நீங்கள் உங்கள் புத்திரரும் மித்திரரும் உற்றாரும் உறவினருஞ்சூழ எல்லாச்செல்வமும் பெற்று இன்புற்று நெடுங்காலமும் வாழி" என்று வாயார மனதார வாழ்த்துதலையன்றி யாம் செயற்பாலதியாதோ! எமக்கிம்மையில் நீங்கள் செய்துள்ள நன்றியை, இப்பேருதவியை எத்துணைப்பிறப்பெடுப்பினு மதிலெல்லாம்மறவேம்.

சந்தாதாரர்களாகிய சற்குணமணிகளே! இன்னொன்று நும்பால் யாம் வேண்டுகின்றோம்; அஃதென்னெனில், மனிதன் சிற்றறிவுஞ்சின்ஞ்ஞேறம் பல்பிணியும் பெருமயக்குமுடையன் அதனால் மனிதன் செய்வதெல்லாம் குற்றமற்றது முற்றுங்குணமுடையதென்று சொல்லுதல்கூடாது. திருவருட்செயல் விளக்கமுற்றுத்தூண்டுங்காலத்துக்குணமானவை தோன்றும் எமது அறியாமைதலைநின்றகாலத்து குணமில்லாதனவுங் குற்றமுடையனவும் வெளியாகும்.

ஆதலால் செந்தமிழ்ச்செல்வத்தில் குணங்கள் தோன்றின் அதனால்வரும் புகழுக்கும் எமக்கும் சிறிதும் பாத்தியமில்லை, அதற்குப் பாத்தியமுடையான் எல்லாம்வல்ல இறைவனே.

குணமில்லாதன தோன்றின் அதற்குப்பயனாகிய இகழ் எமக்குரியதே.

"குற்றத்தையுங் குணமாகக் கொள்ளுவது பெரியாரியல்பு" என்பர் புலவர்.

அது நிற்க, நமது செந்தமிழ்ச்செல்வத்தில் ஏதேனும் ஏகதேசத்தில் சிற்சில அபிப்பிராய பேதங்களிருக்கலாம், தமது அபிப்பிராயத்திற்குப் பொருத்தமில்லாத ஒன்றை ஒருவர் கண்டவிடத்து அது குற்றம்போல் காணலாம். எல்லாருடைய அபிப்பிராயத்தையும் கவரத்தக்கதாக எல்லாவிஷயமும் ஒருபத்திரிகையில் அமைந்திருப்ப தென்பதுமிக அருமையினும் அருமை. ஆதலால் அதுகருதி எமது செந்தமிழ்ச்செல்வத்தைக் குற்றங்கூறிப் புறக்கணித்துவிடாது இவ்வருடம் போலவே அடுத்த வருடத்திற்கும் சந்தாதாரர்களாகவிருந்து எமக்கு ஊக்கந்தந்து "செந்தமிழ்ச்செல்வம்" ஓங்கி வளர்ந்து பரவுதலைக் கண்டுகளிக்குமாறு வேண்டுவதே யாம் நும்பால் வேண்டுவது.

பத்திராதிபர்.

# செந்தமிழ்ச்செல்வம்.

இன்னிலவுலகின் கண்ணுள்ள ஜீவான்மகோடிகளிற் சிரேஷ்டமான மானிடர்க்கின்றியமையாத பாஷைகள் பலவற்றுள் தெய்வப்பிரசாதமாய்க் கிடைக்கப்பெற்ற பாஷைகள் இரண்டேயாகும். அவை (ஆரியம், தமிழ்) என்பனவாம். அவற்றில் ஆரியலக்ஷண விதியைப் பாணினிமுனிவருக்கும் தமிழிலக்ஷணவிதியை அகத்தியமுனிவருக்கும் ஆதியிற் சிவபெருமான் உபதேசித்தருளியதால் அம்முனிவர்கள் நம்மனோர்க்குதவுமாறு அப்பாஷைகளின் லக்ஷணக் கூறுபாடுகளைத் தந்தம் பெயருக்கேற்ப முறையே (பாணினீயம், அகத்தியம்) என்ற திருநாமங்களுடன் இரு பெருநூல்கள் செய்துள்ளார். அவ்வாரியமானது (கிரந்தம், கீர்வாணம், ஸமஸ்கிருதம், பிராகிருதம்) என்றபரியாய நாமங்களுடன் உத்தரபாகமாகிய வடதிசையில் வழங்கப்பட்டு வந்தமையால் அதற்கு வடமொழியென்றும், தமிழானது (திரமிடம், திரவிடம், திராமிடம், திராவிடம், திரமிளம்) என்ற பரியாய நாமங்களுடன் தக்ஷணபாகமாகிய தென்றிசையில் வழங்கப்பட்டு வந்தமையால் அதற்குத் தென்மொழியென்றுங் காரணப்பெயருண்டாயிற்று. அகத்தியம் என்ற தமிழ்நூலிடத்தே (இயல், இசை, நாடகம்) என்ற முத்தமிழியல்களை விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றது. இஃதன்றித் (தலம், தீர்த்தம், மூர்த்தி) யென்பவற்றின் மான்மியங்கள், சமயக்கூறுபாடுகள், சாதனநெறிகள் (சரியை, கிரியை, யோக, ஞான) சதுர்ப்பாதப்பொருள்கள், வேதாகமசாரங்கள், வருணாச்சிரமதர்மங்கள், நீதிகள், பிராயச்சித்தவிதிகள், வேதாந்த சித்தாந்தவுண்மைகள் முதலிய அரிய விஷயங்களைத் தெற்றெனப் போதித்துக் கிடைத்தற்கரிய (அறம், பொருள், இன்பம், வீடு) என்னும் புருஷார்த்தங்களை யெளிதிற் பெறச் செய்ய வல்லதான நூல்களை வெளியேற்றினது நம் தமிழேயாம். இத்தமிழானது இனிமையென்னு மதுரந்தன்னிடமமையப் பெற்றிருத்தலாற் றன்னியலுக்கேற்ப (இனிமை=தமிழ்) என்னும் பேருடைத்தாயது. இது தென்னாடாகிய நன்னாட்டுக்குத் தாய்ப்பாஷையாகவும் இனிமைபயக்கத்தக்க மதுரத்தையுடையதாகவும், விஷயங்களை ஐயந்திரிபறவுணர்த்தப்போந்த பன்னூல்களுடையதாகவு மிருத்தலால் இத்தமிழ்ப்பாஷையானது தேடக்கிடைக்காத கல்வித்தீபமெனக்கருதி அத்தீபமானது மங்காமலென்றுந் தினகரனைப்போற் பிரகாசித்துக்கொண்டிருக்கச் செய்யவேண்டுமென்ற நன்னோக்கத்துடன் சங்கஸ்தாபனஞ்

செய்திருந்த மதுரைப் பாண்டியர்கள் தங்கள் சங்கப்பலகையினிடத் தேவைத்துப் பிரகாசிக்கச்செய்து வந்தார்களென்பதை நாம் நான்முக மாய்த் தெரிந்தவிஷயம். அங்ஙனமிருக்கத் தற்போதுள்ள நம் நாட்டி னர் தமிழென்றால் வேம்பெனமதித்துவெறுத்து அன்னியபாஷைகளை யமிர்தமாய்க்கொள்ள முயல்கின்றார்களே, அச்சோ! ஈதென்ன விபரீ தம். நம் தாயார் முலைப்பாலுடன் கலந்தூட்டித் தாராட்டிப் பாராட்டி நம்மைச்சீராட்டிவளர்த்துவந்தது தமிழன்றோ! நமக்குச்சொந்தத்தாய் பாஷையாகிய செந்தமிழ்ப் பாஷையை விர்த்திசெய்துவரவேண்டுவது நமது கடமையன்றோ. இக்காலத்துள்ள நம்மவர்க்குத்தமிழை வளர்க் கவேண்டுமென்ற ஞாபகங்கிஞ்சித்தேனுமின்றி அன்னிய பாஷையிற் றலையிட்டுத்திரிவதினால் நம் தமிழுக்குரிய மகிமாலக்ஷணங்குன்றி நா டுஞ்சீர்கேடுற்று க்ஷீணதசையடைந்து அன்னியரிகழுதற்குப் பாத்திர மாயிருப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பது ஞாயமா? முற்காலத்தில் நம்நாடு இப்படித்தானா விருந்திருக்கும். (சேர, சோழ, பாண்டிய) மன்னர்களின் அரசாட்சிக்காலத்தில்,கம்பனென்றும், காளமேகனென் றும், ஒட்டக்கூத்தனென்றும், புகழேந்தியென்றும் எத்தனையோ கவி சிரேஷ்டர்களிருந்து நம் தமிழைப் பிரபலப்படுத்தி வந்திருக்கின் றார்களே, அதின் பல்லாயிரக்கோடியிலோர் பாகமேனும் இப்போது காணக்கிடைக்கவில்லையே. அந்தோ, ஈதென்னபரிதாபம்! (தன்னைப் பார்த்துப்பின்னைப்பார்) என்பதுபோல, தன்பாஷையைப்போஷித்துக் கொண்டன்றோ பிறபாஷையைக் கவனிக்கவேண்டும். (அப்பன் கூழுக்கழுகிறான், பிள்ளை கும்பகோணத்தில் அன்னதானஞ் செய்கி றான்) என்பதுபோல தாய்ப்பாஷையாகிய தமிழானது மகிமை குன்றி மங்கிப்போயிருக்கும்போது பிறபாஷையில் நுழைந்து அதைக்கௌ ரவப்படுத்துவதினாலுண்டாகும் பயனென்னை. நாம் அன்னியபாஷை களை யெவ்வளவு பிரயாசைப்பட்டுக்கற்று அதனாலுன்னத பதவி யெய் தினும் நமக்குத்தமிழ்னென்ற சுயதேசகுறிப்புமாறிக் கற்றபாஷைக் குறிய தேசக்குறிப்புக்கிடைத்துவிடுமே? உதாரணமாக, ஒரு கருப்பு மனிதன் இங்கிலீஷ்பயின்று, பி. எ. முதலிய உன்னதபரிக்ஷார்த்தங் களிற்றேறிப் பெரும்பட்டந்தாங்கினாலும், அவன் வெள்ளைக்காரனா வானா, அந்தப்பாஷை நம் சொந்தப்பாஷையாகுமா, இதர பாஷாபிமா னிகளின் முன்மாதிரியான பழக்க வழக்கங்களைக்கண்டேனும் நாம் பின்பற்றவேண்டாமா? அவர்களுக்குரிய அபிமானமும் யோஜனாபி விர்த்தியும் நமக்கில்லையா, ஆங்கிலேயர்கள் (கிரீக்கு, லத்தீன், பிரன்சு,

ஹீப்ரு, ஸம்ஸ்கிருதம்) முதலிய பல பாஷைகளிலுமிருந்து பல பதங்களைப் பொறுக்கியெடுத்து இங்கிலீஷ் பாஷையென்று பெயரிட்டு அதைத் தங்கள் சொந்தப்பாஷையாக மதித்து அப்பாஷையை விர்த்தி செய்வதற்காக உலகெங்கும் பள்ளிக்கூடங்களேற்படுத்தி லக்ஷக்கணக்கான பிள்ளைகளைப் படிக்கும்படிசெய்து வருகின்றார்களே யதன் காரணமென்ன, பாஷாபிமானமன்றோ? அவர்களுக்கு அந்த நவதானியப் பாஷையின்மீது அவ்வளவு அபிமானமிருக்கும்போது, ஜகத்ரக்ஷகராகிய சிவபெருமான் நம் தென்னாட்டுக்கென்றே திருவுளம்பற்றி யுபதேசித்தருளிய தெய்வப்பிரசாதமும், முருகவேள் கிருபையால் முனிக்கரசாகிய அகத்தியர் உலகிற் பரவச்செய்ததும், நமக்கே சொந்தமான துமான செந்தமிழை யபிமானிக்கக் கடமைபூண்ட நாம் அபிமானியாது (யாருக்குவந்தவிருந்தோ) என்று கைசோரவிட்டுப் பராமுகமாயிருப்பதானது நம் தமிழ் நூல்களிலுள்ள விஷயவிசேஷ அருமை பெருமை முதலிய கோட்பாடுகளை இத்தகைத்தென்று உற்றுப்பாராத தோஷமேயாகும். அத்தோஷத்தை நிவர்த்திக்கப்போந்த பாஷாபிமானமுண்டாகும் பக்குவத்தைத்தேடித்தமிழை முன்போல வளர்ந்தோங்கச்செய்யவேண்டுவது நம்தேசாபிமானிகளின் கடமையன்றோ. ஆதலின் நம் தேசாபிமானிகளிலொருவரும், திருச்சிநகர் வாசியுமாகிய ஸ்ரீமான். பண்டிதர் அமிர்தம் சுந்தரநாதம்பிள்ளையவர்கள், பாஷாபிமானமுண்டாக்குவதற்குள்ள பல வழிகளிற் பத்திரிகையேசாலச்சிறந்த நல்வழியெனக்கண்டு தாமேயாசிரியராயமர்ந்து பாஷாபிமானப் பற்றுதலுண்டாகத்தக்க பல அரியவிஷயப்பிரயோகங்களுடன் செந்தமிழ்ச்செல்வம், என்ற நம் சுதேசபாஷையின்றிருநாமத்தையே மகுடமாய்ச்சூட்டி நாளது விரோதிகிருதுவரு சித்திரைமாத முதலாகத் திரிசிரபுரத்திலிருந்து நடைபெறச்செய்துவரும் அருமையான இம்மாதாந்தப் பத்திரிகையை நம் தேசாபிமானிகளாகிய யாவரும் அன்புடனாதரித்து என்றும் நிலைபெறச் செய்யவேண்டுமென்று யாம் மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**வே. முத்தனுசாரி,**

**ஸ்டேஜ்மானேஜர்.**

**S. S. S. V.** கம்பெனி, பழனிஸ்தலம்.

## " சன்மார்க்க கிர்த்தியங்கள். "

(211-ம் பக்கத்தொடர்ச்சி.)

இயற்கையே இவ்விடத்தில் "சுத்தத்தினின்றுபுறனுவதுஎன்றால் சரத்காலப்பூரணச் சந்திரனைப்போன்றமுகமும் நீலோற்பலம் போன்ற நயனங்களும் குமிழமலரை யொத்த நாசியும், கோவைக்கனி போன்ற அதரமும், மூன்றும்பிறைச் சந்திரனைப்போன்ற நெற்றியும் தென்னங் குரும்பையோ, மல்லிகைச்செண்டோ, பம்பரமோ, தங்கத்திலுலைக ந்த கிண்ணங்களோ என்று அதிசயிக்கும்படியான ஸ்தனங்களும், வாழைத்தண்டுகளைப்போன்ற, துடைகளும் புத்தகத்தைப்போன்ற பாதங்களும், இன்னும் என்நாவால் நவிலமுடியாத அவ்வளவு ரூபலா வண்ணியமுடைய ஓர் அணங்கைக் கண்ணுறுறும்வாலிபன் ஆளாகுங் குற்றமே. அப்படி ஒருவன்ஒருத்தியைக் கண்ணேறுக்குவானேல், அவனது கண்களாகிய வண்டுகள் அந்தரமணியின் முகமாகிய அர விந்தத்திலுள்ள அழகென்னும்அமுதத்தைப் பானஞ்செய்து அவன் மனதானது அக்கண்மணியின் வனப்பிற்சிக்கி விடுபடாதவஸ்தையடைந்து கொண்டிருந்தால், அவன்தான் - என்ன செய்வான் பாவம்! இதுபற்றியே,

> " காமமே குலத்தினையும் நலத்தினையும் கெடுக்கவந்த களங்கம்
> காமமே தரித்திரங்களத்தனையும் புகட்டிவைக்கும் கடாரம்,
> காமமே பரத்திக்குச் செல்லாமல் வழியடைக்கும் கபாடம்.
> காமமேயனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியும் கத்திதானே "

என்று முதியோரும் கூறியுளார். ஆதலால் அதைச்சீக்கிரம் துறந்து விடுதல் உத்தமம். இன்னும் பெண்களினால் உண்டாகும் பற் பலவிதமான துயரத்தைக் கவனிக்கும் பொழுது என்னென்று சொல் லுவேன். அதுபற்றி.

> " ஆலகால விஷத்தையும் நம்பலாம் ஆற்றையும் பெருங்காற்றை [யும் நம்பலாம்,
> கோலமா மதயானையையும் நம்பலாம் கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
> காலனார்விடுதூதரை நம்பலாம் கள்ளர்வேடர்மறவரை நம்பலாம்,
> சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்றுத் தியங்கித் தவிப்பரே "

என்று கூறப்பட்டுள்ள இத்தகைய அநேக ஆன்றோர் வாக்கியப் படி சீதையால் இராவணன்கெட்டதையும், தாரையால்சந்திரனவமான மடைந்ததையும், அகலிகையால் இந்திரன் மானத்தை இழந்ததையும் மேனகையால் விஸ்வாமித்திரனின் தவம்போனதையும் பார்க்கும் நெஞ்சமானது எண்ணொணாத் துன்பத்தை யடைகின்றது. இப்பேர்ப்பட்டா நின்றஎண்ணமுடியாத இன்னல்களைக்கவனித்து உசிதத்தைகைக்கொள்ளாது நிற்கும் மூடரில் சிறந்தவர் உண்டோ? இவ்வாறு அவின் துன்பங்கள் நிற்க, இனி சித்தத்தின் சிறப்பைக்கவனிப்போம். நளனுக்கு நாயகியான நமது தமயந்தியானவள் தன் ஆசைக்கற்பகமாகிய பிராணபதியைக் கானகத்தினிடமாக விட்டுப்பிரிந்து போகும் சமயம் ஓர் பெரிய அரவத்தால் விழுங்கப்பட்டு பின் ஒரு வேடனால் அதன் வாயினின்று விடுதலையாக்கப்பட்டு அப்பால் அப்பாதகன் அவள்மேல் இச்சைவைத்து அவளைப் பலாத்கரிக்க சினங்கொண்டு தன் கற்புவலியால் அன்னவனைச் சாம்பலாய் பஷ்மமாக்கியும், பதிவிரதா தர்மத்தை தனக்கு ஓர் அணிகலமாகக்கொண்ட நமது திரௌபதியை கொடியோனாகிய துர்ச்சாதனன், கல்விக்கடலை யுண்டவர்களும் சிறப்புவாய்ந்த மேன்மைக் குணங்களமைந்தவருமாகிய அக்கண்மணியின் பிரியநாயகர்களுமான பஞ்சபாண்டவர்கள் முன் கொண்டுவந்து அன்னவளை அலங்கோலப்படுத்துமாறு மனதிலெண்ணி அக்காரிகையின் துகிலைக் களையுங்கால் அவ்வனிதாமணியின் பதிவிரதாதர்மத்தால் அவளின்வஸ்திரமானது களையக்களையவளர்ந்தும், இன்னும் குணசீலியானநல்லதங்கையானவள் ஆரணியத்தின்கண் வேடனால் பலகஷ்டத்தை அனுபவித்து தனது மேன்மைக்குணமாகிய விசிதத்தால் அவனை அவ்விடத்திலே எரித்தும் இருப்பதாக புத்தகங்களில் எழுதியிருப்பதைப் பார்த்தவுடன் ஆனந்தத்தையும், வாசித்தவுடன் மனோ உற்சாகத்தையும் வாசித்து முடிந்தவுடன் வியப்பையும் அவ்வாக்கியங்களைக் கேட்டவுடன் சந்தோஷத்தையும் விளைவிக்குமென்பதற்கு ஐயமுண்டோ? ஆடவர்களின் விசிதம் கெடுவதற்கு மங்கைகள்தான் காரணமென்று சொல்வதினால் மாதர்களின் சுத்தத்தைக் கெடுக்க ஆடவர்கள் எதுகரம் இல்லை யென்று சொல்வது தகாது. புருஷர்களும் ஒருவாறு இடையூறாகவே யிருக்கிறார்கள் இந்த உண்மையை உதாகரிக்க சிரங்களையும் ஐந்நான்கு கைகளையும் உடையவனான இராவணேசுவரனின் திருஷ்டாந்தமேபோதுமானது அத்துஷ்டன் ஸ்ரீராமபிரானது அகத்

தில் மகாலக்ஷிமியாக் விளங்கி நின்ற சீதாபிராட்டியார் தனது இல்லத்தில் தனித்திருக்கும்படி மாரீசனை ஒருபொன்மானாக அனுப்பி அதைச் சீதை வேண்ட, அந்தமானைத்தொடர்ந்து ஸ்ரீராமர் செல்ல, மானானது அகப்படாமல் வருத்தமுற, கடைசியாக அம்மானை தனது பாணத்தால் கொல்ல அது லக்ஷ்மணா என்று கதறிவிழ, சீதையோடு தங்கியிருந்த லக்ஷ்மணன் ஸ்ரீராமரைத்தேடிச்செல்ல; சீதாபிராட்டியார் தனித்திருக்கும்படி நேரிட, ஈரைந்துதலையான் ஓர் தவசியின் உருவெடுத்து சீதையிடம் வந்து அன்னவளை ஓர் ஆகாயவாகனத்தின்மேலேற்றித் தனது நகரமாகிய இலங்கைக்குச்செல்ல, பின் ஸ்ரீராமபிரான் தேடிச்சென்று ஆஞ்சநேயரின் பலத்த உதவியால் சீதைவிடுவிக்கப்பட்டு இராவணன் அடைந்த பலாபலனை என்னென்று சொல்லுவேன்; இப்படியாக விசித்தமென்னும் மீகாமன் இல்லாது தனது ஜீவியமாகிய மரக்கலம் எப்படி ஓடும்? மாலுமியில்லாத கப்பல் எப்படி தன்னுடைய சரியான பாதையை விட்டு பெரும்பாரையில் மோதி எவ்வளவு சேதத்தை அடையுமோ அவ்வளவாக ஒரு மனிதனுக்கு தனக்குள் சுத்தமில்லாவிடின் அவன் தன் ஜீவியத்தில் அனுபவிக்கவேண்டியிருக்கும் கஷ்டநஷ்டங்கள் அளவிறந்தது. மேற்கூறியுள்ள துர்க்குணங்களையெல்லாம் அறவொழித்து சிறப்புவாய்ந்த சுபகுணங்களை அடையுமாறு விசுத்தத்தையே கைக்கொண்டு ஒழுகல்வேண்டியதாதலால் அப்பேர்ப்பட்டநின்ற சுத்தத்தைக் கொள்ளுதற்கு வேண்டிய சிலமுக்கிய காரணங்களெடுத்துக் கூறுவோம்.

(இன்னும்வரும்.)

GEORGE. RETHNASAMI,

S. P. G, College,

TRICHY.

# மக்கட்பேறு.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற."

என்ற குறளில் 'ஒருவன் பெறும் பேறுகளுள் அறியவேண்டுபவைகளை யறிதற்குரிய புதல்வரைப் பெறுதலல்லாது மற்றைப்பேறுகள் ஒருபொருளாக மதிக்கப்படா' என்றதனால் மக்கட்பேற்றினருமை தெரியலாகும். மானிடராய்ப் பிறத்தலே ஓர் மண்டலத்தின் மிகவரிது. அதினும் பலநூல்களைக்கற்று ஞானவானாய்ச் செல்வமுடையவனாதல் மிகவுமரிது. ஒருக்கால் மிகுதியுஞ் சான்றோனாய்க் குணம், குலம், கல்வி, செல்வம், கொடை, அருள் என்றின்னவைபோன்ற சற்குணாதிகள் சாலவமைந்தோன் எனினும் 'மக்கட்பேறு' அமைந்திலனேல், மலடன்என்றெண்ணப்பட்டு, மறுமையிலுந்துறக்கமடையான். என்னை? 'புத்திரனைப் பெறாதான் புத்தென்னு நரகெய்துவன்' என்று ஆன்றோர் கூறலாலெனக. முற்பிறப்பின் தவமின்றி யாவர்க்கும் புத்திரப் பெறுதல் கூடாவாம். சாதாரணமாக இவ்வுலகின்கண் பெரும்பான்மையுஞ் செல்வராயினோர்க்குப் புதல்வர் உளராதல் அரிதாக இருக்கின்றது. அது, அவர்கள் முன்செய்த வினைப்பயன் பாற்படும். புதல்வனெனுந் தெப்பந் துணை செய்யாவிடிற் பவக்கடல் கடப்பதரிதாம். மக்கட்பேற்றின் அருமையுஞ் செப்பரும் பெருமையும் மேற்போந்த விடையங்களான் கைநெல்லிக் கனிபோற் றெளிவாகக் காணலாம். என்னெனில் குணமமைந்தமகனே 'தலையமைந்தயானைக்கு வினைபமைந்தபாகன்போற்' சகல உத்தரகிரியைகளுக்கும் தென்புலத்தார், முனிவர், தேவர் முதலிய வானவர்க்குச் செலுத்தவேண்டிய கருமங்களுக்கும், சொத்தின் உரிமைக்குமாகிய யாவற்றுக்கும் இன்றியமையாக் காரணமாகத் தன்றந்தைக்கமைகின்றனன். புதல்வன் உத்தரகிரியைகளுக்கு உதவுதல் இன்றியமையாதது என்பதை

"மைந்தனைப்பெறுகின்றது மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
அந்த மில்கட னாற்றுதற் கேயன்றோ."

என்ற கந்தபுராணக் கூற்றானறிக.

சிலர் 'நானும் புத்திரனைப்பெற்றேனென்று தமக்குள்ள ஒருபுத்திரனிலேயே அகமகிழ்கின்றனர். 'தனிமரந்தோப்பாகாது, தனிப்பிள்

னைபின்னையாகாது' என்ற பழமொழியையன்னார் மறந்தனர் போலும். இது பற்றியன்றே 'உடன்பிறப்பில்லா உடம்புபாழ்' என்று ஔவையாரும் 'புதல்வரைப்பெறுதல்' என்று ஒருமையில் அதிகாரங்கூறுது பன்மையிலேயே பெருநாவலருங் கூறிப்போந்தனர். பகீரதனென்பான் தன் மூதாதையர் அறுபதினாயிரவர் கபிலமுனிவரது சாபத்தீக்கிலக்காகிச் சாம்பரடைந்ததைக்கேட்ட கணத்திலேயே சிவபிரானை நோக்கி யருந்தவத்தால் வேண்ட, பின்னரப்பரமனருளால் கங்கை யிம்மண்ணுலகில் வந்ததைக்கண்டு மிகமகிழ்ந்து அதன் தீர்த்தத்தைக் கொண்டு தெளித்தமாத்திரத்து, அவ்வறுபதினாயிரவரும் உயிர்த்தெழுந்தனரெனக் கூறுபவான்றோர். பகீரதன் அக்குலத் துதிக்காமல் இருப்பின் அன்னார் சுவர்க்கமடைதலொண்ணாது. தசரதன் என்பான் பல்லாண்டு தவம்புரிந்தும், புத்திரப்பேறிலனாகக் கடையிற்றான்செய்திருந்த பெரும்புண்ணியத்தாலன்றோ புத்திரபாக்கியமடைந்தனன். பழிப்பில்லாத நற்புதல்வரையொருவன் அடைவானாயின், எழு பிறப்பினும் மவனைத் துன்பங்கள் அணுகா. மேலுந்தம்மக்கள் சிறுகையால் அளாவியசோறன்று தாய்தந்தையர்க்கு அமிழ்தினும் ஆற்றவினிதாயிருக்கும் 'மகன்றந்தைக் காற்று முதவியிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லெனுஞ்சொல்' என்று பெருநாவலர் திருவாய் மலர்ந்தருளி யமையால், ஒருபுதல்வன் கல்வியில் மிக்கத்தேர்ச்சியுற்று அதி நிபுணனாய் இவன் சற்சனர் மெச்சும் சபாபூஷணமோ! வித்வான்கள் புகழும் விக்கிரமசிங்கமோ! காவலர் களிகொளும் பாவலதீரனோ! எனப்பல்லோராலும் புகழ்ப்பெற்றுத் தன்றந்தையைக் களிக்கச்செய்வதினும் பிறிதோர் சிறப்பானபொருள் அத்தந்தைக்கியாது? உலகிற்பெருந்தனம்படைத்தபேர்களும் புத்திரரில்லாக் குறையாலன்றோ நாகப்பிரதிட்டை, அசுவத்தப்பிரதக்கணம், காசிசெல்லுகை, தானதர்ம மிகுதியாக வியற்றுதல், முதலியவைகளைத் தவறாதநடாத்துகின்றனர். ஆகலின் தம்மக்கள் அறிவுடையவராயிருந்து தந்தைக்குதவுதலானது தந்தைக்குமாத்திரமேயன்றி அவனினும் இக்குவலயத்திராநின்றவுயிர்களுக்கெல்லாம் மிக இனிதாம். பாண்டுமகாராஜன் ஒருக்கால் வேட்டையாடக் காட்டகத்தே சென்றபோழ்து மானுருத்தரித்து இன்புறுஞ் சமயத்துற்ற கிர்தமனென்ற முனிவன்மீதுமயற்கி அம்புதொடுத்தான் 'நீ இன்பமற்றிருத்தி' என்றம்முனிவன் சபிக்க, மனைவியுடன் சோக் கூடாதென்ற சாபத்திற்கிரங்கி, மக்களிலா வாழ்க்கையைக் குறித்து மிகத்துயரெய்

தித் தன்மனைவியான குந்தியைநோக்கிக் கூறுஞ்செய்யுட்கள் ஈங்குக் கவனிக்கற்பாலன.

(வில்லிபாரதம்) சம்பவச்சருக்கம் செய் (59, 60, 61)

'கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சுஞ்
சொல்லா லுருக்கி யழுதோடி தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்த
ரில்லா தவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்?'

'மெய்தானம் வண்மை விரதந் தழல்வேள்வி நாளுஞ்
செய்தாலு முலகத் தவர்நற் கதிசென்று சேரார்
மைதாழ்த டங்கண் மகவின் முகமன்று பார்வை
யெய்தாதொ ழியிற்பெ ருமின்ப மிவணு மில்லை'

'மென்பா லகரைப் பயவாதவர் மெய்ம்மை யாகத்
தென்பா லவர்தம் பசித்தினி தீர்க்க மாட்டா
ரென்பா ணிகழ்ந்த வினையாலிட ரெய்தி நின்றே
னின்பா லருளுண் டெனினுய்வனெ டுங்க ணல்லாய்'

ஆகவே 'மக்கட்பேற்றிற் பெறும்பேறில்லை' என்பதை வற்புறுத்திக்கூறியவாறும். ஆலமரத்தை விழவொட்டாதபடி அதன் விழுது தான் வேரூன்றித் தாங்குதல் கடுப்பத்தான் தளராது செய்யும் நன்முயற்சியால் இம்மை மறுமைகளில் தந்தையைத் துன்பமடையாதவாறு தாங்க வல்லவன் அவன் பெற்ற புதல்வனேயாம். சிறப்பெனப்படுவது இஃதே யன்றோ?

இதனை யன்றே

'நைந்திடி யற்ற வால நடுங்கிவீழ் கின்ற தென்று
வந்தவீ ழூன்றி வீழா வகைநிலை விளக்கு மாபோல்
மைந்தர்க டமக்கு ணல்ல வறிவினன் மகிழ்ந்து சேர்ந்து
தந்தையைத் தளரா வண்ணந் தாங்குவர் தவத்தி னென்றான்'

என்று இராமாயண உத்தரகாண்டக் கவியும் புலப்படுத்துகின்றது.

இங்ஙனம்,
சே. ரா. சிம்மப்பையன்
பாலசந்திரபண்டிதன்.

## ஏன் ஆலயத்திற்குப் போகிறீர்கள் ?

(கிருஷ்ணன்) கோவிந்தா ஸ்ரீரங்கம் வருகிறாயா இன்று மோகினி வேடம் நன்றாய் இருக்கும்.

(கோவிந்தன்) ஆம்ஆம் நான் சரியான துணையில்லாது எப்படிப்போவதென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன் நல்லவேளை நீ வந்தாய், சற்று இரு உடை தறித்துக்கொண்டு வருகிறேன்.

[வீட்டிற்குள் உடை தரித்துக்கொள்ளுகிறான்]

(கிருஷ்ணன்) செட்டி சிங்காரிப்பதற்குள் பட்டணம் பறிபோகும் போல் இருக்கிறதே, இது என்ன கைப்பிரம்பு ஏன்? கைக்கெடியாரம் ஏன்? கோவிலுக்குப் போனால் பயபக்தியுடனல்லவா போகவேண்டும்?.

[இத்தருணத்தில் இவர்கள் சிநேகிதன் மரியசூசே வருகிறான்]

(கிருஷ்ணன்) கமான், கமான், டேக் யுவர் சீட்.

(மரியசூசே) எங்கே அப்பா போகிறீர்கள்? என்ன கோவிந்தா வெளிச்சம் போடுகிறாய்?.

(கிருஷ்ணன்) ஸ்ரீரங்கம் போவதற்கு இவ்வளவு தடபுடல்.

(மரியசூசே) ஓகோ சரிதான் எனக்குத்தெரியும் இப்போது கொட்டகை உற்சவந்தானே அங்கே எல்லாரும் போகலாம் போல் இருக்கிறது நானும் வருகிறேன்.

(கோவிந்தன்) ஆல்ரயிட், மேன், கமான், கொஞ்சம் விபூதி நெத்தியில் தடவிக்கொள் உன்னை உள் கோவிலுக்குக்கூட அழைத்துப்போகிறேன்.

(கிருஷ்ணன்) சரி உங்கள் தைரியம்,

[மூவரும் புறப்பட்டுப்போய் தெப்பக்குளம் முகனையில்]

[ஜட்காவண்டிக்காக நிற்கிறார்கள்.]

(கோவிந்தன்) சுசே! அதோ போகிற அசாமியைப்பார் என்ன தளுக்கு.

(கிருஷ்ணன்) சரி, சரி, சுசே நீ இதற்குத்தான் வந்தாயோ?

(சுசே) சரி நிறுத்தப்பா, நீ கோவிலுக்குப்போய் என்ன செய்யப்போகிறாய், எதற்காகப்போகிறாய்?

(கிருஷ்ணன்) நீங்கள் உங்கள் கோவிலிற்கு எதற்காகப் போகிறீர்கள் இதற்குத்தானே?

(கோவிந்தன்) இது என்ன சுசே இந்த கிருஷ்ணன் யார் தெரியுமோ இவர்தான் எங்கள் கடவுள் அவருடன் இதைப்பற்றி வாதாட வேண்டாம்.

(சுசே) இருக்கட்டும் கோவிந்தா, எதற்காக இவ்வளவு ஜனங்கள் போகிறார்கள், எல்லாரும் பக்தர்களா நீ என்ன யோசிக்கிறாய் எங்கள் கோவில்களில்கூட எவ்வளவோ நடக்கிறது அதற்காகத்தான் உங்கள் கோவில்களைப்பார்க்க வருகிறேன்.

(ஜட்காவண்டிக்காரன்) ஸ்ரீரங்கம், ஸ்ரீரங்கம், ஆள் ஒன்றுக்கு இரண்டு அணு இரநூறு ரூபாய்க் குதிரை மெயில் வண்டியைப்போல் போகும்.

[கிருஷ்ணன் முன் பெட்டியின்மீது உட்கார்ந்து கொண்டான். சூசேயும் கோவிந்தனும் வண்டிக்குள் உட்கார்ந்தார்கள். வண்டி ஓடுகிறது]

(சுசே) என்ன கோவிந்தா ஏன் இவ்வளவு ஜனங்கள் போகிறார்கள், நீ யென்ன யோசிக்கிறாய், நாம் எதற்காகப் போகிறோம்.

(கோவிந்தன்) நீ சொல்லுவது சரியே (1) சிலர் சாமான் வாங்கப் போவார்கள்.

(2) சிலர் பக்தன் என்று பெயர் எடுக்க
(3) பிறர் மேல் குற்றம் கண்டு பிடிக்க
(4) சிநேகிதர்களைப்பார்க்க
(5) தங்கள் ஆடைப் பகட்டை பலர் பார்க்க
(6) பெரியோருடைய தயை பெற
(7) கப்பலிற்கு ஆள் ஏற்ற
(8) முடிச்சு அவிழ்க்க
(9) வெகு சிலரே உண்மையாகப் பக்தியுடன் நமது கிருஷ்ணனைப்போல் போகிறார்கள்,

(சுசே) சொல்லுகிறான். } இவ்வளவுதானா.
(10) ஊருடன் ஒத்து வாழவேண்டுமென்று போகிறார்கள்.

(11) வேடிக்கை விநோதங்களைப்பார்க்க
(12) சந்தோஷமாய்ப் பேசிச்சிரிக்க
(13) மற்றவர்களைத் திருப்தி செய்ய
(14) தாசி வீட்டுக்குப்போக

(15) தங்கள் வாகனுதிகளைப் பிறர் பார்க்க
(16) மனைவியின் தொந்தரவை நீக்க
(17) பிறர் நடை யுடை பாவனைகளைக் கவனிக்க
(18) பிரசங்கம் செய்ய
(19) தன்மீதுற்ற பழியை மறைக்க
(20) நேசர்களைச்சந்திக்க
(21) பிச்சை எடுக்க

இன்னும் பல காரணங்களால் போகிறார்கள் நீ சொன்னதுபோல் யக்தியுடன் கடவுளுக்குத் துதி செலுத்தி உயர் பதவி அடையப் போவது வெகு சிலரே.

(கிருஷ்ணன்.) என்னப்பா பேசுகிறீர்கள் எனக்குச் சொல்லக் கூடாதா !

(கோவிந்தன்) எல்லாம் உன்னைப்பற்றிதான்?

[இச்சமயத்தில் வண்டி காவேரிப் பாலத்தின் மீது போய்க்கொண்டிருக்கிறது.]

(தொடரும்.) J. S. நரசிம்மலு.

## விநோதக்கூற்று.

1. ராமன்:—கிருஷ்ணா நீ புதுவீடு கட்டப் போகிறாய்போலிருக்கிறதே.

கிருஷ்ணன்:—ஆமாம் புதுவீடுதான் கட்டப்போகிறேன் பழைய வீடு கட்டவில்லை.

2. கோவிந்தன்:—கோபாலா, உன் தங்கை சங்கீதம் பாடுவதில் ரொம்ப சிரமப்படுகிறாள்.

கோபாலன்:—ஆமாம் என் தங்கை சங்கீதத்திற்கு ரொம்ப சிரமம் கொடுக்கிறாள்.

3. ஒரு பையன் கடையில் 4 அணுவுக்கு உப்பு கேட்டான் அவன் கொஞ்சங்குறைய உப்பு போட்டான் ஏன் குறைத்தாய் என்று பையன் கேட்க தூக்கிக்கொண்டுபோக சுலபமாக இருக்கும் என்றான், உடனே பையன் ஒரு அரையணுவைக்குறைத்துக் கடைக்காரனிடம் கொடுத்தான் ஏன் அரையணுவைக் கொடுக்கவில்லை என்று கேட்க அவன் எண்ணுவதற்குச் சுலபமாக இருக்கும் என்றான்.

# பொறுமை.

(211-ம் பக்கத்தொடர்ச்சி,)

செந்தமிழ்ச்செல்வத்தை விரும்பி ஏற்று அதனோடு கொஞ்சிக் குலாவி மகிழும் நண்பர்களே! குணமணிகளே! கல்விவான்களே! திரு மல்கிய செல்வவான்களே!

முன் சஞ்சிகையில் பொறுமை என்பதைப்பற்றிச் சூக்குமமாகச் சில எழுதிமுடித்துப் பொறுமையாற் கேட்டாரும் கெடுகின்றாருங்கெ டுவாரும் பலரெனவும் இவைகட்குத் திருட்டாந்தம் பின்னரெழுது வோமென்றும் எழுதிவிட்டுக் கவனிக்கக் காலமின்மையாற் றொடர்ந் தெழுதாதிருந்திட்டேன்.

நான் பத்திரப் பதிவுசாலையில் (Registaror office) உத்தியோ கத்திலமர்ந்துள்ளே னாதலினால் ஓய்வு கிடைப்பதரிதாகிறது.

அதோடு ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகைத் திருவருட்டமிழ்ச் சங்க த்து விருத்தி கருதிச்செய்யும் திருப்பணிகளே எனக்கு மகிழ்ச்சியை யும் மும்மைப்பயனையும் தருந்தொழிலென மேற்கொண்டு நடத்து கின்றேனாகையால் பத்திரிகைக்கு எழுதுவதை மறக்க நேர்ந்தது.

எனது நண்பர் பலர் என்னைக்கிட்டி "ஏன் உங்களுக்குப் பொறு மைவரவில்லை? ஏன்பொறுமை வந்தது" என்று விளையாட்டாக வினவி ஞாபகமூட்டித் தொடர்ந்தெழுதப்பணித்தனர்.

தமிழ் சிறிதும் தெரியாரும் பத்திரமெழுத வருகின்றனர். அவர் எழுதும் தமிழைக்கண்டவர் இது ஒரு புது பாஷை என்றே நினைக்க வேண்டி வரும் அவைகளுக்கு இலக்கணம் புதிதாக இன்னொரு அகத் தியர் பிறந்தே யமைக்கவேண்டும்.

நான் பத்திரங்களைக் காணுந்தோறும் நான் அடையும் பரிதாபத் திற்களவேயில்லை. இது ஒரு பெருங்கண்ணாவியே.

ஐயோ பத்திரமே! பத்திரமாயிரு வெளியே போவாயானால், சிவபெருமானும் அறுமுகப்பெருமானும்தமிழைத்தா அதனைவளர்த்த அகத்தியமுனிவர்பாற் கற்ற முதன்மாணவராகிய திரணதூமாக்கினி முனி என்னும் தொல்காப்பிய முனிவரருளிய இலக்கணமாகிய தொல் காப்பியத்தை இல்காப்பியமாக்கி விடுவாய் என்று கூறுவது வழக்கம்.

இவ்விதமாகக்கல்லார் தீட்டிய கலப்பிழைமலிந்த கடிதங்களை யுள்ளபடியே பதிவுசெய்யும் மாசுதீர ஒவ்வொருநாளும் வீட்டுக்கு

வந்ததும் இரவில் ஒரு மணி நேரம் சில அருமைத்தமிழ் நூலைப்படி த்துப்பின்னரே படுக்கைக்குப்போவேன்.

அக்கொள்கையையுடைய வெனக்குச் "செந்தமிழ்ச்செல்வத்தில்" சிலதீட்டி என்னபிப்பிராயங்களை வெளிக்காட்டி நண்பர்களுக்கு விருப்பையூட்டிவர வெண்ணித்தொடங்கினேன்.

நிற்க, நிறுத்தமுறையானே பொறாமையாற் கெட்டார் கெடுகின்றார் கெடுவார் என்னும் முக்காலங்களில் இரண்டாவதாகக்கூறிய கெடுகின்றாருக்கு உதாரணங்கூறுதல் குற்றமாக முடியுமாதலானும் கவனித்து நோக்கின் தெளிவாகத் தாந்தாமே பொறாமையாற் கெடுவாரைக் காணலாமாதலானும் அதனையும், பொறாமையாற் கெட்ட சரிதங்களைக் கேட்டும் பொறாமையாற் கெடுகின்றவரைக்கண்டும் உள்ளார் பொறாமை கொண்டவரைக் காணுங்காலத்து இதுவரையுங் கெடாதிருந்தாலும் இனியேனுங் கெடுவரென்று ஐயமற எண்ணுதல் கூடுமாதலானும் மூன்றாவதாகக்கூறிய பொறாமை கொண்டார் கெடுதலடையப்போதலாகிய எதிர்காலத்துக்கும் உதாரணங்கூறாது பொறாமையாற் கெட்டார்க்குப் பண்டைக்காலத்து நடந்துள்ள சில திருட்டாந்தங்களைக்கூறி என் வியாசத்தை முடிக்கின்றேன்.

நமது அன்பர்களும் சகோதரர்களுமாகிய கிறிஸ்தவர்கள் கொண்டாடும் விவிலியநூலில் இஸ்ரவேலரின் பெருக்கத்தைக் கண்டு இஸ்ரவேலரைத் துன்புறுத்தியவர்களை யழிக்கக்கருதிய எகிப்தரசனாகிய பார்வோன் தானும் தன்னினத்தாரும் அழிந்து இன்றும் பழிப்புக்கிடமாகவிருத்தலையும் இந்துக்களாகிய நாம் ஐந்தாவதுவேதமென்றுகொண்டாடும் மகாபாரத காவியத்தில் துரியோதனன் தருமர் முதலிய ஐவரின் ஆற்றல் முதலியனகண்டு பொறாமைகொண்டு தருமர் முதலிய ஐவரை அழிக்கக்கருதி பல வஞ்சனைகளும் சதியும் செய்ய அதனாற் பழிப்பையும் அழிவையும் அடைந்தமையையும் தருமர்முதலிய ஐவர் புகழ்பெற்று மேன்மை யுற்றதுமாகிய இச்சரிதங்கள் பொறாமையாற் சூழ்ந்து கெட்டோரையும் பொறாமையின்றி பொறுமை கொண்டதால் வாழ்ந்து புகழ்பெற்றுய்ந்ததையுந்தெளிவாகத் தெரிவிக்கின்றதன்றோ இன்னும் இது சம்பந்தமாகச் சில கதைகள் எழுத விருப்பமுண்டு அவற்றைச் சமயம் வாய்ப்புழி எழுதுவன்.

அ. சுப்பையாபிள்ளை

நிர்வாகி, ஸ்ரீ சுகந்தகுந்தளாம்பிகை திருவருட்டமிழ்ச்சங்கம்.

கள்ளத்தெரு, திருசிரபுரம்.

# அறிவு.

(ஸ்ரீகங்கா ஜடேச சர்மா அவர்களெழுதியது.)

## அறிஞர்.

அறிவுளோ ரனைத்து முள்ளோர் அகவிரு ளகன்றோ ரின்பஞ்
செறிவுளோ ரவதி யுற்றோர் செகமெலா மெச்சு நீரார்
திருவுளோர் திடமு முள்ளோர் திரவியம் படைத்தோர் தேவ
உருவுளோ ருக்க முள்ளோர் உலகினிற் பெரிய ரன்றோ!.

## அறிவிலி.

அறிவிலா ரேது மில்லார் அகவிருள் சூழ்ந்தார் நன்மை
செறிவிலா ரவதி யுற்றார் செகமெலா மிகழப் பெற்றார்
திருவிலார் திடமு மில்லார் திரவியம் படைத்து மில்லார்
உருவிலா ருக்க மில்லார் உலகினிற் கடைய ரன்றோ!

அயர்ந்தோரை உயர்ந்தோ ராக்குவதும், காடரை நாடராக்குவதும், சிறியோரைப் பெரியோராக்குவதும், நரரைச் சுரராக்குவதும் எது? அறிவே!

மித்துருவைச் சத்துருவாக்குவதும், நாடரைக் காடராக்குவதும் பெரியோரைச் சிறியோராக்குவதும், வானரை வீணராக்குவதும் எது? அறிவின்மையே!

'அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா அரண்" (குறள்.)

மனிதர்கட்கு எல்லா நன்மைகளையும் அளிக்கவல்லதும், அனைத்திற்கும் மேலானதும், அனைத்திற்குங் காரண மானதுமாகிய 'அறிவைப்' பரவச்செய்தலே பிறவிப்பயனாகக் கருதல் இன்றியமையாதது

"உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு" (குறள்.)

என்று நான்முகனார் தமது திருத் "தமிழ்மறை"யிற் கூறியவாறு விருப்பினால் முகமலர்தலும், வெறுப்பினால் முகங்குவிதலு மில்லாது உயர்ந்தோர் நட்பை ஸம்பாதித்தலே அறிவிற்கு முதற்படியாம்.

அறிவென்பது வெளியிலிருந்து விலைக்குப் பெறுவதும். (தங்கம் முதலிய உலோகங்களைப்போல்) கனிகளினின்று வெட்டியெடுப்பதுமல்ல. அது ஒவ்வொரு மனிதனிடத்திலும் இயற்கையாயமைந்திருக்கிறது. அந்த அறிவென்னும் ஒளி (ஜோதி)யானது அறிவின்மையென்

னும்புகை (இருள்—பனியால்) சூழப்பட்டிருக்கின்றது. இதனை (அறிவின்மையை) நீக்குவதே அறிவு—ஜோதி—ஒளி வீசக்காரணமாம்.

"அரிணி"யிலிருக்கும் "அக்நி"யைப்போல் மனித'ருள்ள'த்தில் "அறிவு" இருக்கின்றது.

"அரிணி"யைக் கடைவதனால் அக்நி வெளிப்படுவதுபோல் அறிவின்மையை நீக்கினால் அறிவு (உதயமாய்த்) தோன்றுமென்பார் பெரியோர்.

அறிவின்மையை நீக்கி அறிவைப் பெருக்கக் கல்வி இன்றியமையாதது. ஆதல்பற்றி

I. பெரியோர்களாற் சேர்ந்தெடுக்கப்பட்டதும், இயற்றப்பட்டதும், நடத்திவருபவையுமான அறிவு புகட்டும் நூற்களிலும், பத்திரிகைகளிலும் மனதைச்செலுத்தி ஓதி அதன்வழி நிற்பதாலும்.

II. பல ஸங்கங்களுக்குச்சென்று ஆங்குள்ள அங்கத்தினருடன்

"மனந்தூய்மை செய்வினைதூய் மையிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்" (குறள்.)
"மனத்துளது போலக் காட்டி யொருவர்க்
கினத்துள தாகு மறிவு." (குறள்.)

என்று நாயனார் "தெய்வநூ"லிற் கூறியவாறு பழகி பரிசுத்த மனத்தராய்ச் சம்பாஷிக்கையில் அநேக தத்வங்கள் வெளியாகி அறிவைப் பெருகச்செய்யு மாதலானும்.

III. அநேக பெரியோர் செய்யும் உபந்யாஸங்களை உற்றுக் கேட்டு அவற்றை மனத்திலிருத்துவதாலும்

"இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார் வாய்ச்சொல்"

என்றபடி கேட்பவர்க் குதவும் விஷயங்களை பசுமரத் தாணிபோலப் பதியச்செய்தல் மிக அவசியமானது. அன்றியும் பெரியோர் முன்னும் தேவதை முன்னும் (ஆலயம், தீர்த்தம், க்ஷேத்திரம் முதலிய விடங்களிலும்) சென்றமாத்திரத்தாலேயே அநேகருக்குப் பய, பக்தி விஸ்வாஸமும் அதன்மூலமாய் அறிவும் பெருகத் தொடங்குவதுண்டென்பதும், "அறிவுடையா ரெல்லா முடைய ரறிவிலார்
என்னுடைய ரேனு மிலர்." (குறள்)

என்றபடி அறிவு இல்லாதவர் எல்லாச்சிறப்பு முடையவராயினும் ஒன்றுமிலாதவரை யொப்பர் அறிஞர் வறியரேனும் ஸகலபாக்கியங்க

ளுமுடையராவார். அறிவுடையவரே பலவான் ஏனெனில் அறிவே அனைத்தையுந்தேட வல்லதன்றோ? அறிவுடையவர் இறந்தும் இறவாதவராவர். அறிவின் பெருமை அளவிடப்படாதது. அறிவு இன்ப (மோக்ஷ)த்தையும், அறிவின்மை துன்ப (நரக)த்தையும், அளித்தற்யாலதெனில், வேறென்ன கூறவேண்டும்.

இவ்வளவு சிறப்புக்குங் காரணமான அறிவைநாடி அன்புடன் தேடி இன்புடன்கூடி இருப்பதேகோடி. அறிவு எப்பொழுது தோன்றி(உதயமாயி)ற்றோ அப்பொழுதே மேலான நிலையைத் தருகின்றது.

இகபரமிரண்டினிலும் மேலான் பதவியை யடைந்த ஒவ்வொருவரும் அறிவையே லக்ஷ்யமாகக்கொண் டுழைத்தவர்கள்.

நம் ஸ்ரீமத் சங்கராசார்யர், ஸ்ரீராமாநுஜர், ஸ்ரீமத்வாசார்யர், ஸ்ரீராமக்ருஷ்ண பரமஹம்ஸர், ஸ்ரீவிவேகாநந்தர், ஸ்ரீச்வேதாரண்யர், (திருவெண்காடர் அல்லது பட்டினத்தடிகள்)ஸ்ரீதாயுமானவர் முதலிய மஹான்களும், (பதினெண்சித்தர்களும்) மதாசார்யர்களுள் க்ரிஸ்து, புத்தர், மஹம்மத் முதலியவர்களும் உலகெங்குஞ்சென்று அளவற்ற அரிய பெரிய உபதேசங்களைப் புரிந்திருக்கிறார்கள். அநேக அறிவு புகட்டும் நூற்களை உலோகோபகாரங் கருதித் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள். எப்பொழுதும் ப்ரஸங்கமாரி பொழிந்து கொண்டிருந்த மேகம்போன்ற பெரியோர்கள் அறிவையே தேடினார்கள், கண்டார்கள், அடைந்தார்கள், அதிதீவிரமாய் வளர்த்தார்கள் அதுவே அவர்களை உயர்ந்ததும், ஆநந்தமானதும், ஈடற்றதும், அழிவற்றதுமான பதவியிலிருத்திற்று.

அறிவே "நண்பன்" அறிவே "மனைவி" அறிவே "மக்கள்" அறிவே "அன்னை" அறிவே "தந்தை" அறிவே "ஆசான்" அறிவே "கடவுள்" அறிவே "அனைத்தும்."

நற்கதி யருளுவதாற் "கடவு"ளென்றும், நன்மதி புகட்டுவதாற் "குரு"வென்றும், நலத்தையே நாடச்செய்வதாற் "றந்தை" யென்றும், இன்னமுதீந்ததாற் "றாயெ"ன்றும், நரகத்தினின்றும் மீட்டதாற் "றனய"னென்றும், இன்பமளிப்பதாற் "றார"மென்றும், இடுக்கண்களைந்து இன்சொற்கூறிக் கவலைபகற்றிக் களிப்புறுத்துவதால் "நண்பனெ"ன்றும், நவிலப் பெறுவது நன்மைக்கெல்லாம் பிறப்பிடமாகிய அறிவே.

அறிவினாற் கதிபெற்றோர் அநேகர், மஹாதபஸ்விகளும், யோகிகளும், அறிவின் பலத்தாலேயே நற்கதிபெற்றார்கள். மஹாமூடனுக்

கும் அறிவின் ஒருகிரணம் (விளங்கி) அவனைத் தாக்கிய மாத்திரத்தி லேயே அவனது ஸகலபாபுங்களும் நீங்கி உத்தமமான கதியடையத் தக்கவனும் விடுகிறான். (பகுத்தறிவில்லாமல் செய்யும் எந்த நற்காரியமும் பயனற்றதென ஸ்ரீமத் சங்கராசார்யர் பின்வரும் ச்லோகத்தால் தெரிவித்திருக்கிறார்.

"குருதே கங்கா ஸாகர கமனம் வ்ருதபரி பாலன மதவா தானம்
ஜ்ஞான விஹீநே ஸர்வம தேனன முக்திர் நபவதி ஜன்மச தேன"

மேலும்,

"அறிவு" நீரதொன்றே அதுபிரமமேயுதனை
"அறிவு" ஞானமே ஞானமாம் அருந்தவமுனியே
செறிசராசரமாகிய திரளெலாமதுவே
பிரிதாரவுயிர்ப் பேதமும் பேசியவதுவே."

என விநாயக புராணமும்

"எண்ணுறைந்த மேன்மைபடைத் தெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்
கண்ணிறைந்த "சோதி"யைநான் காணதா நல்லறிவே."
'அங்குமிங்கு மெங்குநிறை யற்புதனார் பொற்பறிந்து
பங்கயத்துள் வண்டாய்ப் பயன்பெறவர் நல்லறிவே."

"......அறியாமையாகின்ற விருளகல......"

"......அறிவாயிருந்திடும் நாதவொளி......"

"அரும்பொருளேமணியே யென்பேயே
னன்பானவறிவேயெனறிவில்......"

"......நன்றாயறிந்தே னறிந்தபடி நின்றுசுகநான்......"

"......அறியாமை யறிவாதி பிறவாக
வறிவார்கள் அறிவாகநின்றநிலை..."

"......அறிவதேது மறவறிவிலாமை
மயபாயிருக்கு மெனையருளினல்"

"ஆரறிவாரென்ன ஆநந்தமறை ஓலமிடும்
பேரறிவேயின்பப் பெருக்கேபராபரமே."

"அறிவி லறியாமை யற்றறிவாய் நின்று
பிறிவரவா நந்தமயம் பெற்று—குறியழிந்தா
லனைறக் கூடல்வேண்டேனைபாவிவ் வாக்கையையே
என்றைக்கும் வேண்டுவனே யான்."

என்பது முதலான ஸ்ரீ தாயுமானவர் திருவாக்கையுங் காண்க.

உடலினுக் குயிரேபோல உயிர்க்குயி ராஹையபோற்றி!

உடலுயிர்க் கறிவுநல்கி உடலினைக் கழிப்பாய்போற்றி!
உடலுயி ரெனப்பின்னீங்கா ஒற்றுமைப் பொருளேபோற்றி!
உடலுறை யுயிர்க்குமெட்டா ஒளிர்பெருஞ் சோதிபோற்றி!
"எங்குமொன்றாய் முட்டித்ததும்பி முளைத்தோங்குஞ் சோதி"
"என்னாசை கேட்டிலையோ யுரா ஏன்செயலோ வேதுமிலை".
"தன்னாசை நாடாகித் தத்துவக்கூத் தாட்டியதே,"
அனைவரு மறிவுபெற்று அகமகிழ்ந் தடங்கிவாழ்க. சுபம்!

## அகத்தியர்.

(198-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிவபெருமானால் அனுப்பப்பட்டுத் தென்றிசையைவடதிசையோடு சமப்படுத்திய அகத்தியர் தான் பொதியத்திருந்தவர். இவர்தான் தமிழைவளர்த்த செவிலித்தாய். இவர் தமிழ்நாட்டார் என்று நாம் சொல்லத்துணியோம். ஏனெனில் சிவபெருமான் தென்பால் செல்லுமாறு பணித்தபோழ்து அவர்சிவபெருமானைநோக்கித் தென்தேயம் தமிழ்த்தேயமாயிற்றே அங்கு நான் சென்றால் கேட்டார்க் குத்தரஞ் சொல்லவேண்டுமே என்றபோழ்தத்து சிவபெருமான் அகத்தியர்க்குத்தென்னாட்டார் தொடையும் நடையுங் கவினப்பயிலும் தமிழை அருள்செய்து பரவ விடுத்தாரென்றும் அது போதாதென்று எமது பெருந்தகை ஆறுமுகப் பெருமானிடத்தும் இலக்கணம் ஓதி யுணர்ந்தாரென்றும் புராணங்கள் வாயிலாய்க் கேட்கப்படுகின்றபடியாலுமே யாம். இவர் வடநாட்டாரே என்பதற்குப் போதிய ஆதாரங்களை இவர் இயற்றியருளிய இலக்கணச் சூத்திரங்களைக் கொண்டு பின்னர் காட்டுவோம்.

சிலர் பலஅகத்தியர்கள் உண்டெனக் கூறுவர். அதற்கும் பண்டைச்சான்றுகள் பலவிருக்கலாம், அந்த அகத்தியரனைவரும் இவருக்குப்பிற்பட்டவரே என்பது நமதுஎண்ணம். பொதியத்திருந்து தமிழ்பரப்பிய அகத்தியருக்கு முந்தியுமிருந்தனரென்பதற்கு ஆதாரங்களுளவேல், சிவபெருமானருள்கொண்டு தமிழ்விரித்த பொதியத்தமரும் அகத்தியருக்கு முற்பட்டு எத்தனை அகத்தியரிருந்திருப்பினும் பிற்பட்டு எத்தனை அகத்தியர் தோன்றியிருந்தாலும் அவரனைவரும் அமிழ்தினுமினிய தமிழ் மொழிக்கு இலக்கண வரம்பு வகுத்த பொதியத்து அகத்தியரின் புகழொளிக்குமுன் சிலர் புகழ் சூரியன்முன் நக்ஷத்திரங்கள்போல ஒளியிழந்தழியும். இன்றும் எனது நண்பர் ஒருவர்

அகத்தியர் என்னும் பெயர் தரித்திருக்கிறார். அவரும் ஒரு புலவரே? அவர் அகத்தியர் என்னும் நாமம் தரித்ததாலே பொதியத் தகத்தியர் என்னலாமா? ஏகாலி ராமன் தசரதராமனாவானா? அல்லது பரசுராமனாவானா? அல்லது பலராமனாவானா? இதுபெயர் தாங்கியதால் வந்தபெருமையக்கும்போலும். சுப்பிரமணியக்கடவுளின் பெயரைத்தாங்கியவர்கள் சுப்பிரமணியக் கடவுளின் பெருமையைத் தாங்கி விடுவார்களா?

அகத்தியனெனப் பலபுலவ ரிருந்திருக்கலாம் அவர்களும்அநேக நூல் செய்திருக்கலாம் அவர்களையும் அவர்கள் நூலையும் பற்றி யாண்டுங் கண்டிலேம். அல்லதூஉம் அவர்கள் தமிழ்க்கு அருந்துணையாயினரென்றும் யாருஞ்சொல்லவுங் கேட்டிலேம். இதுநிற்க.

இனி சந்தனப்பொதியத் தடவரைப் பெருமானாகிய அகத்தியர் சரித்திரத்தைப் பின்னும் ஆராய்வாம்.

அகத்தியர் தமிழ்மொழியைச் சிவபெருமான், சுப்பிரமணியக் கடவுள் முதலியோரின் அருளால் செவ்வனே பயின்று எமது சிவபெருமான் அறுமுகக்கடவுள் முதலிய கடவுளரும் வடதிக்கோன் இந்திரன் முதலியதேவர்களும் இயற்றிய இலக்கணங்களை முக்குற்றமுமறக் கற்றுணர்ந்து செய்யுள்வழக்கு உலகவழக்குகளைக் கண்டறிந்து பழகிச் சின்னாட் பல்பிணிமக்கள் கற்றற்கெளிதா யிருக்குமாறு இயல், இசை நாடகம் என்னும் மூன்றுதமிழின் இலக்கணங்களை தன்பேராலே நூலியற்றி நிறுத்தினர். அவ்விலக்கணம் பேரகத்தியம், சிற்றகத்தியம் என்னும் இருதிறத்தன. பின்னர் திரணதூமாக்கினிமுனிவர் எனனும் தொல்காப்பியர் முதலிய பன்னிரு மாணாக்கர்களுக்குப் போதித்துத் தமிழை உலகெங்கும் பரப்பினர். அப்பன்னிரு மாணாக்கரும் பலநூலியற்றிப் பல மாணாக்கர்களுக்குப் போதித்துந் தமிழைப் பரவச் செய்தனர். அப்பன்னிருமாணவர் சரித்திரத்தை விரித்துத்தொடர்ந்துபின் எழுதி வருவோம். அகத்தியர் தமிழில் வன்மை படைத்ததுபோல வைத்தியம் முதலிய பல சாஸ்திரங்களிலும் வல்லரென்பர். அதையும் இனி ஆராய்வோம்.

(இன்னும்வரும்.)

பக்திராத்யர்.

## தேசாபிமானமும் பாஷாபிமானமும்.

“உள்ளதைச்சொன்னால் உடம்பெரிச்சல்” என்னும் பழமொழி நமது நாட்டில் எல்லோராலும் சாதாரணமாகச் சொல்லப்பெற்று வருகின்றது.

இது எவ்வளவு சாதாரணமாக வழங்கப்பெற்று வருகின்றதோ அவ்வளவு சாதாரணமான பொருளுடையதல்ல.

ஆழ்ந்து நோக்குவாருக்கு அதன் பொருள் தோன்றும். எம்வளவு ஆழ்ந்து ஆழ்ந்து நோக்குகின்றனரோ அவ்வளவுக்கு அவ்வளவு அவ்வாக்கியத்தின் பொருள் நனி விளங்கும்.

இங்கு இதன் பொருளை விளக்க யாம் வரவில்லை நாம் எடுத்துக்கொண்ட விஷயம் வேறு, எடுத்துக்கொண்ட விஷயத்தைக் கவனிக்கவேண்டுமாதலால் இதன் திரண்ட பொருளைக்கூறிப் பின்றொடங்குவாம்.

ஒருவன்பால் உள்ள குற்றத்தை எடுத்துக் காட்டினால் அவனுக்கு வருத்தமாக இருக்கும் என்பதே இதன் திரண்ட பொருளாம்.

இதிலும் ஒன்று கவனிக்கத்தக்கதுண்டு.

ஒருவன் "நான் யார் கண்ணிற் குச்சி எடுத்துக் குத்தினாலும் என்னைப்பொல்லாதவன் என்கின்றார்கள்" என்று சொல்லி வெறுத்துக்கொண்டான் என்ற கதைபோல ஒருவன் கண்ணிற் குச்சியெடுத்துக் குத்தினால் வலியாதா? குத்தினவனைப் பொல்லாதவன் என்று சொல்லானா? ஒருவன் குற்றத்தைப் பலரறிய எடுத்துச்சொன்னால் குற்றமுடையவனுக்கு மனநோகாதிருக்குமா? எப்படிப்பட்ட ஞானியாயிருந்தாலும் தன் குற்றத்தை எடுத்துப் பலருமறியச் சொல்லும்போது மனநோகாதிருப்பது அரிது என்பர்.

ஆகையால் ஒருவனை அவமானப் படுத்துதல் காரணமாகவோ அல்லது ஒருவன் உள்ளத்தில் வருத்தத்தை யுண்டாக்குதல் காரணமாகவோ அவன்குறையை அவனுக்கு முன்னாற் கூறின் அது கொடுமையும் பாவமும் ஆம்.

ஒருவன் குற்றத்தை அவனுக்கு எடுத்துக்காட்டிப் புண்படுத்துதல் கூடாது என்ற பொழுது ஒருவன் குற்றத்தைப் பலரறிய எடுத்துக்காட்டி அவமானப்படுத்துதலும் உள்ளத்தைப் புண்படுத்துதலும் மகா கொடியதென்பதற்குக் கேட்கவும் வேண்டுமா!

இதுபற்றியன்றோ ஆன்றோர்கள்,

"பகையின்று பல்லார் பழியெடுத்தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக்காண்பான் கொடிறுடைத்துக்கொல்வான்போல்
கைவிதிர்த்தஞ்சப்படும்." என்று கூறியருளினர்.

ஆதலால் ஒருவன்பாலுள்ள குற்றத்தைப் பலரறிய வெளியிட்டு அவனுக்கு அவமானமுண்டாக்குகின்றவன் கொலைபாதகஞ் செய்தவனுக்குச் சமானமாகின்றான். கொலைபாதகஞ் செய்தவன் போம் நரகம் இவனுக்கும் பிராப்தமாதற்குத் தடையுளதோ!

இன்னுஞ்சில மாபாதகர்கள் உளர் அவர்கள் ஒருவனிடத்து எவ்வகைக் குற்றமுமில்லாத காலத்தும் அவனிடத்து இல்லாததும் பொல்லாததுமாகிய பல குற்றங்களைத்தாமே கற்பித்தேற்படுத்தி பலருமறியப் பறையடித்துத் தெரிவித்துத் திரிவதே தமது தொழிலாகக் கொண்டு வாழ்கின்றனர். இவர் கதி அதோகதி என்பதற்கும் ஐயமுண்டோ?

நிற்க,

ஒருவன் குற்றத்தை எடுத்துக்காட்டுதல் நலமே. ஆனால் குற்றத்தை எடுத்துக்காட்டப் புகுவோன் எண்ணம் நலமுடையதாயிருப்பின் எவையும் நலமே.

குற்றமுடையவனைத் திருத்துதல் கருதியாயினும் உலக நன்மை கருதியாயினும் ஒருவன் குற்றத்தை எடுத்துக்காட்டின் குற்றத்தை எடுத்துக் கூறியவன் குற்றமுடையவனாகான். அவன் புண்ணியஞ் செய்தவனையாகின்றானென்பதுந் திண்ணியதே.

மனிதராய்ப்பிறந்தவர்களுக்கு முக்கியமாய்க் குலாபிமானம் பாஷாபிமானம் மதாபிமானம் தேசாபிமானம் என்பவை முக்கியமாக இருக்கவேண்டும் என்பர். இந்த நாலும் இல்லாமற்போனாலும் தேசாபிமானமும் பாஷாபிமானமும் இருந்தேதீரல் வேண்டும் இவ்விரண்டுமில்லாதவரை மனிதர் கணக்கிற் கணிப்பது கூடாததே.

இனித்தேசாபிமானி என்ன செய்வது தேசாபிமானம் இருந்தாலென்ன என்றாலோ ஒரு தேசத்தில் பிறந்தவன் தான் பிறந்த தேசத்தினிடத்து அன்புவைத்திருத்தலே தேசாபிமானம் என்று சொல்லப்படும். தேசத்தினிடத்து அன்பு வைத்ததனால் என்னவாயிற்று, எனின் ஒருவன் ஒரு பொருளினிடத்தில் அன்பு வைத்தால் அப்பொருள் அழிவுறாதிருக்கவும் மேன்மேலும் விருத்தியாதலையுங் கருதுவான் அதற்காக உழைப்பான் எப்பொழுதும் கண்ணையுங்கருத்தையும் அதனிடத்தே செலுத்துவான். அதேபோல தேசாபிமானங் கொண்டவன் தன் தேசத்தினிடத்தே வைத்த அன்பு காரணமாக அதன் விருத்தியையே கருதுவன். தன்னறிவு ஆற்றலாற் கூடியமட்டில் தன்னாடு விருத்தியாதற்காக உழைப்பான்.

இதுவேபோற் பாஷாபிமானியும் செய்யவேண்டியது. ஒவ்வொரு மனிதனும் தேசத்தினிடத்தும் பாஷையினிடத்தும் அபிமானங்கொண்டு தேசமும் பாஷையும் சிறப்புறுதற்கு உழைக்கவேண்டும்

கருணை மிக்க ஆங்கில மன்னர் நமக்கும் நமது பாஷைக்கும் நமது தேசத்திற்கும் யாதொரு குறைவும் வாராது மேன்மேலும் விருத்தியாகும்படி அரசாண்டாலும் "செத்தவன் பாரம் சுமந்தவன் தலைமேலே" என்றபடி எல்லாப்பாரத்தையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு நாம் வயிறுநிறைய உண்டு உறங்கிக் கிடப்பது நலமாமா? நமக்கே தெரியாமற்போனாலும் கருணையோடு ஆங்கிலமன்னர் நமக்குவழி காட்டி வருகின்றனரே அவ்வண்ணமாகிலும் செய்யக்கூடாதா? இதுதானும் முடியாதென்றால் பின் என்னதான் செய்வது? தென்னைமரத்தில் ஏறுபவனை எவ்வளவு தூரந்தான் தாங்குவர்கள் கைக்கெட்டிய மட்டுந்தானே தாங்கலாம் பிறகு அவன் தன் பலங்கொண்டல்லவா ஏறவேண்டும்? அரசர்களென்றும் ஜமீன்களென்றும் மெராசுகளென்றும் கோடீச்சுரர்களென்றும் லட்சப்பிரபுக்களென்றும் பிரபுக்களென்றும் பேர் வைத்துக்கொண்டிருக்கும் புண்ணியவான்கள் தமது முன்தவத்தாற்கிடைத்த செல்வத்தைத் தாசிக்கும் வேசிக்கும் கூத்திக்கும் கள்ளுக்கும் சாராயத்திற்கும் கொலைக்கும் சூதுக்கும் தூதுபோவோர்க்கும் நீசர்க்கும் கள்ளர்க்கும் கோர்ட்டுக்கும் கொடுத்தழித்து அவமாக்காதபடி பாஷை விருத்தியாதற்குப் பாடசாலைகள் வைக்கக்கூடாதா? (பத்திரிகைக்கு ஒரு ரூபாய் கொடுத்தால் செல்வமே சென்றுவிடுமென்றஞ்சி சாராயக்கடைக்காரனுக்கும் தாசிவீட்டுக்குத் தூதுபோவோர்க்கும் பை பையாக அள்ளிக்கொடுக்கும் பேதைகளே மிகுந்திருக்கின்றனரே.)

நமது நாட்டு ஏழைகள் வேலை செய்து பிழைக்கத் தொழிற்சாலை வைக்கக்கூடாதா? இதனால் புண்ணியமும் கண்ணியமும் வருவதோடு பொருளும் விருத்தியாமே! தொழில் செய்து உண்ணமுடியா விருத்தர் பொறியிலிகள் முதலியோர் உண்ணச் சாப்பாட்டுச்சாலை வைக்கக் கூடாதா? இவைகள் செய்யவேண்டுமென்னும் எண்ணமே வாராது இருப்பதும் இவர் முற்பிறப்பின் பாவமே.

தவத்தாற் செல்வம் இப்பிறப்பிற் பெற்றோர் நல்வழியிற் செலவு செய்யாது தீயவழியிலும் பாவவழிகளிலும் செலவு செய்யின் அடுத்தபிறப்பில் இரந்தாலும் சோறு கிடையாது வழியில் அநாதையாய்ப் பார்ப்பவர் காறியுமிழக் கடைப்பட்டு இறந்துகிடப்பர்.

குங்குமஞ்சுமந்த கரம்போலச் செல்வம்படைத்து அதன் பயனை யடைய முடியாதிருப்பதும் பரிதாபமே!

சிலநாளில் நரைத்துத்திரைத்துக்காண அருவருப்பார்கும்தன்மை யுடையவரும் இப்பிறப்பில் நோயும் மறு பிறப்பில் நாகமும் தரும். தாசிக்குக்கொடுக்கும் பணத்தைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்தால் மேன்மேலும் வளர்ந்து வனப்புக்கொண்டு கவினைத் தோன்றி இன்மொழியாடி இம்மையில் சுகங்களை எல்லாம் தந்து மறுமையில்மோட்சமூந்தருமே இனியேனும் கவனிக்கமாட்டீர்களா?

உள்ளது சொல்வோன்.

## மாணிக்கஜோதி

(234-ம் பக்கத் தொடர்ச்சி.)

வந்தபிரபு இந்த அவதிக்கென்செய்வர், தன் மனைவியைத் தனக்குச் சமீபத்தில் பார்த்தார் காணவில்லை, ஏ பங்கஜம் ! ஏ பங்கஜம் !! என்று கூப்பிட்டார் சமீபத்திலிருந்தாலன்றோ வருவாள்? சமீபத்திலிருந்தாலன்றோ காதில்விழும்? பெருஞ்சப்தமிட்டழைத்தாரென்றாலும் அந்தக்கும்பலின் இரைச்சலில் இவர் சப்தம் எங்கே அந்த அம்மாள் காதில் விழப்போகிறது. அவள் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டாள். பிரபு தனது வேலைக்காரியாகிலும் இருக்கிறாளா என்று பார்த்தார், அவளையும் காணோம் என்னசெய்வார் "பிள்ளை வரத்துக்கு வந்து புருஷனை இழந்த" கதைபோலாகக்கூடாதே என்று நினைந்து பங்கஜத்தையும் வேலைக்காரியையுந் தேடிக்கொண்டு வந்த வழியே திரும்பிப் போனார். எந்தக்கூட்டத்தை விட்டுத்தான் தப்பி வரவேண்டுமென்று நினைத்தாரோ அந்தக் கூட்டத்திற்குள்ளே இடித்துப் புடைத்துக் கொண்டு நுழைந்து அம்மாளைத் தேடப்புறப்பட்டார். சம்சாரசாகரத்தை விரும்புகிறவர்கள் தனக்கு விருப்பமில்லாததென்று தள்ளிவைத்ததையும் விரும்பி முன் வந்து மேற்கொள்ள வேண்டிவரும் என்பதற்கு இதுவே சாட்சி, தனக்குப்பிரியமில்லாத ஒருபொருளைக்கொள்ளவோ ஒரு காரியத்தைச்செய்யவோ வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகின்றது; ஏனெனில் மனைவியை மகிழ்விக்கவோ பிள்ளையின் நலங்கருதியோ உற்றார்உறவினர் முதலியவர்களின் நன்கு மதிப்பைப் பெறுதற்பொருட்டோ செய்கின்றனர். பிரபு எந்தக்கூட்டத்தைவிட்டு வெளிவர முயன்று வந்தாரோ அந்தக்கூட்டத்துள்ளேயே இடித்துப்

புடைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தது எதற்கு-மனைவியின் பொருட்டன்றோ?

பிரபு உள்ளே நுழைந்து தேடிய இடத்தே தன் மனைவியைக் காணவில்லை. கவலைப்பட்டு இக்கூட்டத்தில் இவளை எங்கு தேடுவது முன் பின்னறியாதவளாயிற்றே என்று மிகக் கவலைப்பட்டுக்கொண்டு திரும்பத்திரும்பச்செம்மையாகச் சுற்றிச்சுற்றித்தேட ஆரம்பித்தார். கடைசியாக வெகு சிரமத்தின்மேல் தன் வேலைக்காரியைக் கண்டார். கண்டதும் சிறிது ஆறுதலடைந்தார்; என்றாலும் அவளைக்கோபித்துக் கொள்ளத்தொடங்கினார். ஏன் பின்னேயே தொடர்ந்துவரக்கூடாது? அம்மா எங்கே? என்றார். ஐயா நான் அம்மாள் உங்களோடு வந்துவிட்டார்களென்றல்லவோ நினைத்து உங்களையும் அம்மாளையும் தேடிக்கொண்டு திரிகிறேன் என்றாள். உடனே பிரபு முன்னிலும் அதிகங் கிலேசமுற்றுத்தானும் வேலைக்காரியுமாகத் தேடத்தொடங்கினார்கள். கூட்டத்தில் எங்குங்காணமல் தாம் வந்த வண்டியினிடத்தில் போய்ப் பார்ப்போமென்று நினைத்துத் தேடிக்கொண்டு வண்டியினருகிற்சென்றனர். அம்மாள் வண்டியினுள்ளே யிருந்தார்கள். பிரபுவுக்கு மிக ஆச்சரியமுண்டாகி என்ன பங்கஜம் உன்னை நாங்கள் அங்கு தேடுகிறோம் நீ இங்கு வந்திருக்கிறாய் என்றார். அதற்கு பங்கஜம் பதில்பேசவுமில்லை அவரைத்திரும்பிப் பார்க்கவுமில்லை. இது என்ன கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலிருக்கிறதே என்று தானுக்குற்று வண்டிக்குட்சென்று பங்கஜம் என்ன நீ ஒரு மாதிரியாய் இருக்கின்றாய் என்றார். அதற்கும் அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை பங்கஜம் பிணக்கங்கொண்டிருக்கின்றாள் என்று நன்றாய் நினைத்து அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு இதமாகப்பேசி அவள் முகத்தைத் தன் கைகளால் திருப்பினார் அவள் மிகக்கோபமாகத் தன் கைகளால் தள்ளிவிட்டாள் இதற்குள்ளே நாங்களும் திருவானைக்காவல் சமீபித்துவிட்டோம் முன்கண்ட வண்டியையுங் கண்டோம் வேறு வண்டியிருக்குமென்று நினைத்தோம் ஆனால் அதனுள் பிரபுவும் அவர் பத்தினியும் இருப்பதுகண்டு இவர்கள் கோயிலுக்குப் போகாதிருப்பதற்குக் காரணமென்னவென்று நினைத்தோம். சற்று அங்கிருந்து கவனித்தபோது அம்மாள் கோபமாக இருப்பதையும் ஐயா அவர்கள் சமாதானம் சொல்லிக் கோபத்தையுந் தணிப்பது கண்டோம் அங்கு உள்ளவர்களை விசாரித்தபோது மேற்சொல்லிய விஷயங்களெல்லா முணர்ந்துகொண்டோம் பிறகு இன்னும் என்ன நடக்கிறதென்று கவனிக்

குமாறு அங்கு ஒரு இடத்தில் நின்றோம் அங்கு நடப்பதும் பேசுவதும நாங்கள் பார்க்கவுங் கேட்கவுங்கூடும் ஆனால் அவர்களுக்குமட்டும் நாங்கள் நிற்பதாவது கவனிப்பதாவது தெரியாது. பலர் அவ்வழியிற்போவோர் பொதுப்பார்வையாகப் பார்த்துக்கொண்டும் சிலர் கவனித்துப்பார்த்துஞ் சிறிது நின்றுவிட்டும் போயினர். இரவானபடியால் அங்கு யாரும் நெடுநேரம் நிற்க விரும்பவில்லை நாங்கள் மட்டும் நின்று கவனித்தோம். கீழே வண்டிக்காரனும் வேலைக்காரியும் நின்றுகொண்டிருந்தார்கள்.

(இன்னும் வரும்.) கதாப்பிரியன்.

## " புத்தகவரவு "

**" நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம். "**

இது மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்களிலொருவராகிய மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச்செட்டியாரால் எழுதப்பெற்றதொரு இனிய வசனநடையமைந்த நூல்.

இது சொல்லழகு நடையழகுடன் பொருளழகுமமைந்தது.

கல்வி, பக்தி, ஒழுங்கு என்பதைச் செவ்வனே விளக்கிக்காட்டி அதன் அருமையை எடுத்துக்காட்டுகின்றது. இவர் கல்வித்திறம் முதலிய விளங்கப் பல புலவரும் கொண்டாடிக்கூறிய சாற்றுக்கவிகளே தக்க புலவரிவர் இவர், இவர்முயற்சி தமிழுலகிற்கு மிக்க தென்பதை யுணர்த்தும்.

நமது செந்தமிழ்ச்செல்வப் புத்தகசாலைக்கு அன்பு கூர்ந்தனுப்பிய கொடைத்திறனையும் பாராட்டுகின்றோம்.

**" சன்மார்க்கம் "** இதுவும் மேற்கூறிய ஸ்ரீமாந் மு. கதிரேசச் செட்டியார் எழுதியதே.

புன்மார்க்கம் புறத்தொழியவும் நன்மார்க்கம் நயந்து பெருகவும் மக்கள் இன்புறவும் எழுந்ததென்றே சொல்வோம்.

பன்மார்க்கங்களினும் சன்மார்க்கம் ஈதெனக்காட்டும் இச்சன் மார்க்கநூல் உலகிற்கு மிக அவசியமுடையதே. இதனையும் நமது செந்தமிழ்ச்சாலைக்கனுப்பிய போன்பிற்கும் பெரிதும் வந்தனமளிக்கின்றோம்.

"**திருவள்ளுவர்**" இது பண்டிதர் ஸ்ரீமான் ஐயோத்திதாஸ் என்பவரால் தீட்டப்பெற்ற அருமையான நூல் "தென்னிந்திய சாக்கிய புத்தசங்கத்தாரால்" வெளிப்படுத்தப்பெற்றது. இதில் திருவள்ளுவரைப்பற்றி பல அருமையான விஷயங்களைத் தெரிகின்றேம். இதனை எமது செந்தமிழ்ச்செல்வப் புத்தகசாலைக்கு அனுப்பியதற்கு நன்றி செலுத்தக் கடன்பாடுடையேம்.

"**மஹாராஜாக்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய மரியாதை நியமனங்கள்.**" என்னும் மகுடம்கொண்ட இச்சிறு நூல் மாயவரம் முனிசிபல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் தீட்டப்பெற்றது.

நூல் உருவத்திற் சிறிதாயினும் பொருளடக்கத்திலும் வளப்பிலும் பெரிதே இதனை எமக்கனுப்பியதற்கு வந்தனிக்கின்றோம்.

"**வேலையின் கூலி**" அல்லது கள்வர் கவர்ந்த கல்யாணப்பெண் இது ஸ்ரீமான் M. S. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட ஒரு அருமையும் அற்புதமும் வாய்ந்த நவீனதமிழ் நாவல் நடையும் கதைப் போக்கும் உள்ளத்துக் களிப்பை மிகுப்பதேயாம். இதன் விலை அணா ஆறுதான்.

இதனை எமது செந்தமிழ்ச் சாலைக்கனுப்பிய நன்றிக்குப் பன்முறை வந்தனம் புரிகின்றோம்.

## பலதேசவர்த்தமானம்.

(1) **நான்கு பிள்ளைகள் பிரசவம்:**—இங்கிலாந்திலோர் பெண் மூன்று பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் ஒரே தினத்தில் பிரசவித்தாளாம். இதுவும் கலியின் விந்தையே.

***

(2) **நூதனப்பிறவி:**—யாழ்பாணத்தைச்சேர்ந்த கைதடியிலொரு பெண் சென்றவாரம் ஒரு பிள்ளையை பிரசவித்தாளாம் இப்பிள்ளைக்கு மலவாசலில்லையாம் இதுவும் கலிகால நூதனமே.

***

(3) **நெருப்பில் லோகாதமரம்:**—மேல் நாட்டிலுள்ள பரங்களில் நெருப்பற்றாத சிலமரங்கள் இருக்கின்றனவாம். அம்மரத்திற்கு பெயர் அச்பெஸ்டாஸ் அம்மரத்தில் அதிக நயமான வேலைகள் செய்துவருகிறார்கள். அவை இரவில் வெளிச்சந்தரும்.

***

(4) நகத்திலெழுதிய சித்திரத்திற்கு ஜர்மன் சக்ரவர்த்தியின் பந்துக்களிலொரு ஸ்திரீயானவள் தன் நாயகனுடைய உருவப்படத்தை எழுதச்

சொல்லி 180 ரூபாய் கொடுத்து, ஓவியக்காரனைக் கொண்டெழுதிக்கொண்டாள். இதைக்கண்டு சில ஸ்திரீகள் தங்கள் நகத்தின்மீது தன் நாயகன் உருவம் எடுத்துக்கொள்கிறார்களாம்.

***

(5) ஆகாய விமானத்தை யழிக்குந்துப்பாக்கி:—அமேரிக்கர் ஒருவர் ஆகாய விமானம் ஆகாயத்திலுள்ள போதத்தைச்சுட்டழித்தற்குரிய துப்பாக்கி யொன்று கண்டுபிடித்திருக்கின்றனர் அத்துப்பாக்கி ஒரு ராத்தல் நிறையுள்ள குண்டை 1800 அடி யுயரத்திற்குச் செலுத்துந்தன்மை யுடையதாம்.

***

சூரியனைக்கொண்டு ஜலம் இறைத்தல்:—நிலக்கரி மரக்கரி விறகு முதலியவைகளை யெரித்து நீர் ஆவியை உண்டுபண்ணி அதன் மூலமாய் ஜலம் இறைக்கும் இயந்திரம வேலை செய்கின்றது. அமெரிக்கா தேசத்தில் சூரிய கிரணங்களை கண்ணாடி மூலமாய் குவீகரித்து அதிக உஷ்ணத்தை யுண்டுபண்ணி அக்கினியால் ஜலம் இறைக்கும் யந்திரங்கள் முதலானவைகள் வேலை செய்யும்படி ஏற்படுத்தியிருக்கின்றார்களாம்.

***

## கழுதையால் வெளிப்பட்ட பத்திரிகை.

இங்கிலாந்தில் ப்ராயடன் என்கிற இடத்தில் ஒரு பத்திரிகையை யாரும் வாங்காமலிருந்தார்களாம் பத்திரிகாதிபதி வாங்காதவர்களுக்குப் புத்தி வரும்படி இரண்டு கழுதைகளுக்கு வெள்ளைத்துணியைத் தைத்துக் கழுதைகளுக்குப்போட்டுப் பெரிய சிவப்பு எழுத்தில் நாங்கள் பத்திரிகையை வாசிக்கமாட்டோம். என்றெழுதி ஊரெல்லாம் சுற்றி வரும்படி செய்தாராம். இதைக் கண்ட சிலர் கெக்கலிகொட்டிச் சிரித்தனர். சிலர் வெட்கங்கொண்டனர். இதனுடைய அர்த்தம் கழுதைகள் மாத்திரம் பத்திரிகைகளைப் படிக்காதே தவிர மற்ற மனித ஜென்மமெடுத்த எல்லோரும் பத்திரிகைப் படித்தே தீரவேண்டுமென்பதாம். அந்த வாரத்திலிருந்து பத்திரிகையை அநேகபேர் வாங்க ஆரம்பித்தார்களாம்.

***

லார்ட்கார்மிகேல்:—சென்னை கவர்னராகிய லார்ட்கார்மிகேலை வங்காளத்துக்கு மாற்றிவிட்டது நமது ராஜதானியின் துர் அதிர்ஷ்டமே. இதற்காக ஆங்காங்கு பொதுக்கூட்டங்கள் கூடி அவரை மாற்றக்கூடாதென்று மனுச் செய்து வருகின்றனர். இவருடைய ஸ்தானத்தில் லார்ட் பெண்ட்லண்ட் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார் ஆயினும் அவர் வருவதற்கு நாலைந்து மாதங்களாகுமென்றும் அவர் வரும்வரை எக்ஸிக்யூடிவ் கவுன்ஸில் மெம்பராகிய மிஸ்டர் ஹாமிக் கவர்னர்வேலை பார்த்துவருவாரென்றும் தெரிகிறது.

***

பேசுகிற நாய்:—ஜெர்மனி தேசத்தில் ஹேர் எபர்ஸ் என்னுமொரு [illegible]வினால் வளர்க்கப்பட்டு குருஇற டான் என்னும் நாய் மனிதரைப்போலவே தனக்குக் கற்றுக்கொடுக்கிற சொற்களை உச்சரிக்கிறதாம்.

***

காலஞ்சென்ற ஆனரபிள் ஸ்ரீ வே. கிருஷ்ணசாமி ஐயர் B. A, B. L. C. S. I. யின் ஸ்தானத்தில் ஆனரபிள் மிஸ்டர் P. S. சிவசாமிஐயர் B. A., B. L. C. I. T. அவர்கள் [illegible] கவுன்ஸில் மெம்பராக நியமிக்கப்பட்டிருக்கிறார். மிஸ்டர் கேப்பியவை மிஸ்டர் [illegible]ர் சிவசாமிஐயரின் ஸ்தானத்தில் அட்வகேட் ஜெனரலாக நியமித்திருக்கிறார்கள்.

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான
இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்.

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

" நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்பந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.
2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.
3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.
4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருபவை.
5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## தபும்லாகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய முண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌவுஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் **வைத்திய வித்தியா** புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.


இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜாராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன

## ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

ப்ரொப்ரைடர் ஆயுள்வேதோதய ஔஷதாலக்

No. 177, சைனபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் யாசெகி



பண்டிதர் K. S. கிருஷ்ணசாமி ஐயருடைய 'எலக்டிரிக்பாம்' என்னும் சூலைநிவாரணித் தைலம், இத்தைலத்தை மேனுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு, பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்யீர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த இழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், P. கணேசரத்னம் பிள்ளை
கடைத்தெருவு 86 நெ. கடை, சேலம் & சர்மா & கோ,
திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம்.
இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்.

# LUEBLESSETFORCNCY SEEKERS.

## THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.

**Sanjeevi Row's lane [Near Little Market]**

*TRICHINOPOLY.*

**Imparts instructions in:—**

| | |
|---|---|
| Type-writing | Book-keeping and |
| Shorthand | Commercial correspondence |

STUDENTS ARE COACHED UP BY SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Games:*—Special arrangements are made for games such as Badminton and Foot Ball.

Scholarships are awarded to students passing their Examinations with distinction

*For particulars apply to:—*

**Mr. V. N. Barathy.**
*Manager.*

கடவுள் துணை.

# புதியபதிப்பு.

# 1911 ஹு த்து கார்நேஷன் தமிழ்ப் பெயரகராதி.

அருந்தமிழ்ப்புலவ ரனைவர்கட்கும்

## ஓர் முக்கிய விண்ணப்பம்.

அஃதாவது..

இதுகாறும் வெளிப்போந்துள்ள பற்பல அகராதிகளைக் கண்ணுற்றிருப்பீர்கள். "தான்றற்புகழ்தல் தகுதியன்றே" என்னு மொழிக்கிணங்கத் தற்புகழ்ச்சியினை மேற்கொண்டு கூறவந்ததன்று. கண்ணுற்ற பின்னர் இப் புதுவகராதியினுக்கும் வேறு அகராதிகளுக்குமுள்ள தாரதம்மியம் சொல்லாமலே யமையும். ஆயினும் இரண்டொன்று கூறுதும். பற்பல பாஷைகளிற் சிதைவுற்று வழங்கும் தமிழ்ச் சொற்களையும், அங்ஙனமே அந்தப் பாஷைகளினின்று தமிழில் வழங்கும் சொற்களையும், வடசொல் திரிசொற்களையும், ஐயாயிரக் கணக்காயுள்ள புதிய சொற்களையும், சிந்தாமணி முதலிய பஞ்ச இலக்கியங்களினும் தொல்காப்பிய முதலிய இலக்கணங்களினும் உரிச்சொல் நிகண்டு முதலியவைகளினுமுள்ள அரும்பதங்களையும் ஆய்ந்தெடுத்து உலகவழக்கில்லாத சிலவை கவிகளாற் பாடியருளிய பாக்களிலிருக்கும் அரிய பிரயோகங்களையுங் கோப்புற்றுத் திருத்தமான பதிப்பாக ஸ்ரீ. கதிரைவேற்பிள்ளை யவர்களைக்கொண்டு 1901-ஹு த்தில் 1-ம் பதிப்பும் 1905 ஹு த்தில் 2-ம் பதிப்பும் 1336 பக்கமாக முன் அச்சிட்டிருப்பதைக் கற்றோரும் மற்றோரும் பார்த்தும் வாங்கியும் கையாண்டுமிருக்கலாம். அதுவும் நன்றே. அப்புத்தகத்தைப் பார்க்கினும் இப்போது அநேக கல்வியிற் சிறந்தவர்களைக்கொண்டு விசேடமாய் எண்ணிறந்த சொற்களைச் சேர்த்து 1712 பக்கமுள்ளதாய் மூன்றாம்பதிப்பு பதிப்பித்து மகா மாட்சிமை தங்கிய இந்தியா சக்கிரவர்த்தி படத்துடன் அழகிய உயர்ந்த தோல்பயிண்டு செய்து பொன்னெழுத்திட்டு செய்யப்பட்டுள்ளது. அகராதியும் ஆசிரியனும் ஒன்று. இதனை ஒவ்வொருவரும் வாங்கிவைப்பது முக்கிய கடமையாகும். இத்தகைய அரிய பெரிய நூலுக்கு விலை ரூபா 4—0—0.

இப்படிக்கு

**பீ. வே. நமசிவாய முதலியார்,**

நிரஞ்சன விலாசம்பிரஸ்,

பாப்பய்யர்வீதி, 88 நெ. ஜார்ஜ் டவுன், சென்னை.

## தமிழபிமானிகளுக்கும் நமது செந்தமிழ்ச் செல்வம் சந்தாதாரர்களுமான பெருங்கருணையாளர்பால் ஓர் வேண்டுகோள்!

நமது செந்தமிழ்ச்செல்வம் பத்திராதிபர் சைவமகாசமாஜத்தின் 6-வது வருஷப்பூர்த்திக் கொண்டாட்டத்தில் ஒரு பிரசங்கியாராகச் சென்னைக்குச்சென்றிருந்தமையாலும் கார்கால உபந்நியாசங்கள் செய்ய சிற்சில ஊர்களுக்குச் சென்றிருந்தமையாலும் இவர்களைத் தலைமையாகக் கொண்ட இரண்டு சங்கங்களின் வருஷப்பூர்த்திக் கொண்டாட்டத்தை நடத்தி வைக்கவேண்டி நேர்ந்ததாலும் நமது செந்தமிழ்ச்செல்வம் மாசிமாதத்துப் பத்திரிகை மாசிமாத முதற்பாகத்தில் வெளிவராமல் பின்பாகத்தில் வெளிவருகின்றது. இதனைப்பொறுத்து ஏற்று தமிழ்விருத்தி கருதி எப்பொழுதும் நமது செந்தமிழ்ச் செல்வத்திற்குச் சந்தாதாரர்களாக விருந்து பத்திராதிபருக்குத் தம்மாலான உதவிகளைச் செய்து தமது கல்வி விருப்பு தாய்மொழியினிடத்துள்ள அபிமானம்பொதுநலங்கருதல் முதலிய தமது சிறந்த குணங்களைப் பரிமளிக்கச்செய்ய வேண்டுகின்றோம்.

நமது செந்தமிழ்ச்செல்வம் மென்மேலும் விருத்தியாவதற்கான ஏற்பாடுகள் மென்மேலும் நடந்துகொண்டிருக்கின்றன.

நமது செந்தமிழ்ச்செல்வம் நின்று நிலைக்க நமது அன்பர்கள் ஆசீர்வதிப்பார்களாக.

கா. அ. ம. நாராயணசாமி.

மானேஜர்.


EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (Ltd.)

**BOMBAY.**

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c

Please Apply to:—

J. G. GNANADURAI,
S/o Mr. J. GNANAMUTHU B. A.
Puthoor, Trichinopoly.